பக்கங்கள்:-பத்து
Registered as a News paper in Sri Lanka
விலை ரூபா. 6.00

# வலம்புரி
Valampuri

துரித தபால்.பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்;பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 04 ஞாயிற்றுக்கிழமை (21.09.2003) தொலைபேசி - 2223378 ஒலி 276

## யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின், வருடாந்தப் பொதுக் கூட்டம் பெரும் சர்ச்சைகள், இழுபறிகள் மத்தியில் இன்று நடைபெறவுள்ளது.

கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் இன்று முற்பகல் 9 மணிக்கு கூட்டம் ஆரம்பமாகின்றது. எனினும் சங்கத் தலைவரான முன்னாள் அரச அதிபர் க.சண்முகநாதன் இன்றைய கூட்டத்துக்கு சமுகமளிக்கமாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கூட்டத்துக்கான அழைப்பினை சங்கச் செயலாளர் ந. வித்தியாதரன் விடுத்துள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

# புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் கொழும்புக்கு திடீர் விஜயம்



(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் திடீரென கொழும்புக்கு விஜயம் செய்துள்ளார்.

கடந்த 17ந் திகதி தரைப்பாதை ஊடாக ஓமந்தைச் சோதனைச் சாவடியில் தனது அடையாள அட்டையை காண்பித்துவிட்டு அவர் கொழும்பு விஜயத்தை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவரது விஜயம் எதுவித முன்னறிவித்தலுமின்றி இடம் பெற்றிருப்பதால் அது குறித்து விளக்கமளிக்க வேண்டுமென்று விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி தலைமையகததுக்கு வவுனியாப் பொலிஸ் தலைமையகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கொழும்பு விஜயம் செய்யும் போது தமக்கு முறையாக அறிவிததல் வழங்கி உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடனேயே பயணம் மேற்கொள்வதாக வவுனியாப் பொலிஸ் தலைமையகம் இச் சந்தாப்பத்தின் போது சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை புலித்தேவன் என்ன காரணத்திற்காக கொழும்புக்கு விஜயம் மேற் கொண்டார் என்பது குறித்து தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.

எனினும் விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயாமாஸ்ரர், புலித்தேவன் கொழும்புக்குச் சென்றதை உறுதிப்படுத்தினார். (இ)

## திருமலையின் பாதுகாப்பை நேரில் அறிய

# எதிர்க் கட்சித் தலைவர் திருமலைக்கு திடீர் விஜயம்!



## படைத் தளபதிகளுடன் ஆராய்வு

(திருகோணமலை)

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும்,பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும் இடையே பெரும் சர்ச்சையையேற்படுத்தியுள்ள திருகோணமலை மாவட்ட பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து நேரில் ஆராய்வதற்காக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு திருகோணமலைக்குச் சென்றுள்ளார்.**

திருகோணமலை மாவட்டத்தைச் சுற்றி விடுதலைப் புலிகள் பல முகாம்களை அமைத்து அம்மாவட்டத்தினதும்,திருகோணமலைத் துறைமுகத்தினதும் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளனர் என்ற எதிர்க்கட்சிகளின் கண்டனக் குரல்களுக்கு மத்தியில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக்காலை திருகோணமலைக்குத் திடீர் விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

திருகோணமலைக்கு விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் திருகோணமலை மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்தும், பாதுகர்ப்பிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்தும் திருகோணமலை மாவட்ட படை உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார். திருகோணமலை கடற்படைத் தளத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பு சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை நீடித்துள்ளது. இச்சந்திப்பின் போது முப்படைத் தளபதிகளும், படை உயரதிகாரிகளும் மற்றும் பாதுகாப்பு அமைச்சின்

(10ம் பக்கம் பார்க்க)

## அரவிந்த டி சில்வாவுடன் கிறிக்கெற் சபையின் தலைவர் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

ரெலிகொம் நிறுவனத் தலைவரும் இலங்கை கிறிக்கெற் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவருமான சுமதிபால நேற்றைய தினம் யாழ்ப்பாணம் விஜயம் செய்து யாழ்.மாவட்டத்தில் கிறிக்கெற் விளையாட்டை மேம்படுத்துவது தொடர்பாக ஆராய்ந்துள்ளார்.

இவருடன் அகில இலங்கை கிறிக்கெற் கட்டுப்பாட்டுச் சபையின் உபதலைவரான அரவிந்த டி சில்வாவும் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

இவர்கள் யாழ்.மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக்கழகங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று முற்பகல் 11 மணியளவில் ரெலிகொம்

(10ம் பக்கம் பார்க்க)

## நீர்வேலியில் பஸ்-மினிபஸ் விபத்து ப.நோ.கூ.சங்கத்திற்குள் மினிபஸ் புகுந்தது

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் தனியார் மினிபஸ்ஸும் விபத்துக்குள்ளாகியதில் மினிபஸ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தினுள் புகுந்தது.

இச்சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு முன்னால் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்தும் மினிபஸ்ஸும் ஏட்டிக்குப் போட்டியாக மாறி மாறி ஒன்றை ஒன்று முந்திச் சென்று கொண்டிருந்தன. திடீரென நீர்வேலியில் பேருந்தை முந்திச் செல்ல முற்பட்ட மினிபஸ் விபத்துக்குள்ளாகி, நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தினுள் புகுந்தது. இதனால் கட்டடத்தின் பகுதி சேதமடைந்தது.

எனினும் வாகனங்கள் இரண்டும் சிறிது சேதத்துடன் தப்பிக் கொண்டன.

மேற்படி விபத்துச் சம்பவம் தொடர்

(10ம் பக்கம் பார்க்க)

## திடீர் தேர்தலுக்கு முகங்கொடுக்க

# எதிர்க்கட்சித் தலைவர்களுடன் ஜனாதிபதி நாளை சந்திப்பு

(கொழும்பு)

ஜே.வி.பியுடன் கூட்டு அமைக்கும் பேச்சுக்கள் தோல்வி கண்டதை அடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பொது ஜன ஐக்கிய முன்னணியைப்பலப்படுத்தும் நோக்குடன் எதிர்க் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ள இப் பேச்சுவார்த்தைக்கு பொது ஜன ஐக்கிய முன்னணியில் அங்கம்வகிக்கும், தேசிய ஐக்கிய முன்னணி,லங்கா சம சமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, மக்கள் கட்சி ஆகியவற்றின் தலைவர்களையே ஜனாதிபதி

(10ம் பக்கம் பார்க்க)

# இளம் குடும்பப் பெண் சடலமாக மீட்பு!

## துன்னாலையில் சம்பவம்

(பருத்தித்துறை)

கரவெட்டி துன்னாலைப் பகுதியில் இளம் குடும்பப் பெண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

துன்னாலை வடக்கு அத்துலு அம்மன் கோயிலுக்கு அருகில், மர்மமான முறையில் இறந்துகிடந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட இச் சடலம் கொடிகாமம் ஐயனார் கோயிலடியைச்சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான முருகதாஸ் வசந்தகுமாரி (வயது25) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

பிரஸ்தாபப் பெண் அண்மையில் இரண்டாவது திருமணம் செய்து கரவெட்டி கிழக்கில் வசித்து வந்துள்ளார்.

நேற்றைய தினம் இவர் மர்மமான முறையில் இறந்து கிடந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி மரணம் தொடர்பாக பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் திருமதி விஜயராகவன் உருத்திரேஸ்வரன் மரண விசாரணைகளை மேற்கொண்டார் இதேவேளை மேற்படி மரணத்திற்கு நஞ்சு உடலிற் சென்றமையே காரணம் என

(10ம் பக்கம் பார்க்க)

# சீனாவில் இருந்து சலுகை விலையில் போர்ப்பயிற்சி விமானங்கள் கொள்வனவு

(கொழும்பு)

இலங்கை, சீனா ஆகிய இரு நாடுகளுக்குமிடையே நிலவி வரும் பாதுகாப்புத் தொடர்பான உறவினைப் புதுப்பிப்பதற்கும், அதனை மேலும் வலுப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வகையில் சீனப் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் தலைமையிலான குழுவொன்று கடந்த புதன்கிழமை கொழும்பு வந்துள்ளது.

பாதுகாப்பு மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் திலக் மாரப்பனவின் விசேட அழைப்பின் பேரில் இக்குழு இங்கு வந்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா மற்றும் இராணுவ, கடற்படை, விமானப்படைத் தளபதிகளை சந்தித்து இக்குழு பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளது.

இந்தச் சந்திப்புக்களின் போது இருதரப்பு உறவுகள் குறித்தும் இலங்கை அரசாங்கம் சீனாவிடமிருந்து கொள்வனவு செய்துள்ள தோட்டாக்களை தயாரித்த றொரின்கோ நிறுவனத்திற்கு செலுத்தவேண்டிய நிலுவைத்தொகையை வழங்குவது தொடர்பாகவும் பேச்சுக்கள் நடாத்தப்பட்டுள்ளன.

மேலும், கடற்படைக்கு இரு அதி நவீன பீரங்கிப் படகுகளை வழங்குவது தொடர்பாகவும் சீனாவுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை விமானப் படைக்கு சலுகை விலையில் மூன்று போர்ப் பயிற்சி விமானங்களை வழங்குவதாக சீனா ஏற்கனவே அறிவித்திருந்த போதிலும் அவற்றை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது தொடர்பாகவும் பாதுகாப்பு அமைச்சர் மட்டத்தில் நடாத்திய பேச்சுக்களில் விரிவாக ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-8)

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக

# யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி மகா சங்கங்கள்

(ஊர்காவற்றுறை)

யாழ். மாவட்டத்தில் புதிதாக 6 சமுர்த்தி மகா சங்கங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கமைவாக பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகியவற்றை உள்ளடக்கி ஒரு மகா சங்கமும், சங்கானை, காரைநகர், சண்டிலிப்பாய் ஆகியவற்றை உள்ளடக்கி ஒரு மகா சங்கமும் உடுவில், தெல்லிப்பழை, கோப்பாய் ஆகியவற்றை உள்ளடக்கி ஒரு மகாசங்கமும் அமையவுளளது.

அத்துடன் பருத்தித்துறை, கரவெட்டி, ஆகியவற்றை உள்ளடக்கி ஒரு மகாசங்கமும் யாழ்ப்பாணம், நல்லூர் ஆகியவற்றை உள்ளடக்கி ஒரு மகா சங்கமும் மற்றும் தென்மராட்சி, மருதங்கேணி ஆகியவற்றை உள்ளடக்கி ஒரு மகா சங்கமுமாக மொத்தம் 6 சமுர்த்தி மகா சங்கங்கள் அமைக்கப்படவுள்ளதாக தெரிய வருகிறது. (உ-75)

## கோப்பாய் கோமான் நினைவு தினம்

கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னியசிங்கம் அவர்களின் 44ம் ஆண்டு நினைவு தினமும் அமரர் திருமதி கோமதி வன்னியசிங்கம் அவர்களின் அஞ்சலி நிகழ்வும் தையல் பயிற்சியில் சித்தியடைந்த மாணவிகளின் பரிசளிப்பு விழா வைபவமும் இன்று ஞாயிறு பி.ப. 4.30 மணியளவில் நல்லூர் சந்தையில் அமைந்துள்ள வன்னியசிங்கம் பொதுப் பணி மன்றத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் தலைவராக பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், ந.சிவபாதம் (புத்தொளி), சிவமகாராசா (தெல்.ப.நோ.கூ.சங்கத்தலைவர்), க.சொக்கலிங்கம்(சொக்கன்) ஆகியோர் உட்பட முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (5)

## இலவச மருத்துவ முகாம்

(ஏழாலை)

மல்லாகம் - தெல்லிப்பழை லயன்ஸ் கழகம் நடாத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று காலை 8.00 மணி முதல் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் சிறுநீர், இரத்தப் பரிசோதனைகள் என்பன வைத்திய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு மருந்துகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளன. (உ-12)

## சிரமதானம்

(பளை)

இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தைச் அண்டிய சுற்றாடல் பகுதியில் தியாக தீபம் திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது. மாதர் சங்க ஒன்றுபடுத்தலின் வலயப் பொறுப்பாளர் தலைமையில் இச் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. (உ-97)

## வங்கி திறப்பு

(கல்வயல்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவின் மூன்றாவது சமுர்த்தி வங்கி நாளை காலை 8.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

மிருசுவிலில் அமைந்துள்ள இச் சமுர்த்தி வங்கி அலுவலகத் திறப்பு விழா தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி திலகநாயகம் போலும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலர் க.கேதீஸ்வரனும், சமுர்த்தி உதவி ஆணையாளர் திருமதி மகேஸ்வரகுமாரும், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும், யாழ். மாவட்ட செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் வ.சத்தியசீலனும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-36)

## முக்கிய கலந்துரையாடல்

(சுண்டுக்குளி)

யாழ்மாவட்ட விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று தமிழீழ விளையாட்டுதத் துறையின் யாழ். மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 23ம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணிக்கு யாழ்.ப.நோ.கூ.ச.மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள விளையாட்டுச் சங்கங்களின் உறுப்பினர்கள், விளையாட்டு அதிகாரிகள், ஆர்வலர்கள் ஆகியோர் இந்த முக்கிய கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (உ-10)

## வட்டியில்லாக் கடன்

(பளை)

கடந்த காலப் போர் நடவடிக்கைகளால் கணவனை இழந்த சுமார் 20 விதவைப் பெண்கள் சுயதொழிலில் ஈடுபடுவதன் பொருட்டு, வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சமாசத்தினால் தலா 15 ஆயிரம் ரூபா வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. (உ-97)

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட

# 700 சமயாசமய ஊழியர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டனர்

(கொழும்பு)

வைத்தியசாலை ஊழியர்களின் பணிநிறுத்தம் தொடர்ந்து வருவதால் நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி உள்ளனர். இதேவேளை, சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி, பதவி நீக்கப்பட்ட 700 சமயா சமய ஊழியர்களின் இடத்திற்கு புதிதாக நியமிக்கப்பட விருக்கும் பணியாளர்களுக்கான நியமனக் கடிதங்களில் ஒப்பமிட்டுள்ளார். சமயா சமய ஊழியர்களுக்கு வேலைநிறுத்தத்தில் செய்யும் சட்டப்படியான உரிமை இல்லை என்பதால் அவர்களுக்குரிய எச்சரிக்கை விடுக்கப்பட்ட பின் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள் என சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார். (ந-6)




கோப்பாய் கோமான்
அமரர் கு. வன்னியசிங்கம் அவர்களின்
44ஆம் ஆண்டு நினைவு தினமும்
அமரர் திருமதி கோமதி வன்னியசிங்கம் அவர்களின்
அஞ்சலி நிகழ்வும்
தையல் பயிற்சியில் சித்தியடைந்த மாணவிகளின்
பரிசளிப்பு விழா வைபவமும்
மேற்படி நிகழ்வுகள் இன்று (21.09.2003) ஞாயிறு பிற்பகல் 4.30 மணியளவில் நல்லூர் சந்தையில் அமைந்துள்ள வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றத்தில் நடைபெறும்
தலைவர்:- பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்
பீடாதிபதி, யாழ்.பல்கலைக் கழகம்
அரசியலில் நீதியாகவும், நேர்மையாகவும், ஏழைகளின் நண்பனாகவும் வாழ்ந்து அயராது பாடுபட்ட கோமானை நினைவு கூர திரண்டு வாரீர்.
நல்லூர் சந்தை
யாழ்ப்பாணம்
நிர்வாகிகள்
வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றம்

# உங்கள் வலம்புரியின் வாரமலர் சங்குநாதம்




விலை ரூபா 14.00

- முஸ்லிம்களுக்கு தனியான இடைக்கால சபையா?
  -டொறிங்ரன்
- யசீர் அர்பாத்தை இலக்கு வைக்கிறது இஸ்ரேல்.
  -கோவையூர் ஜெயன்
- சந்திப்பைத் தவிர்க்கும் ஜனாதிபதி சந்திரிகா.
  -விதுரன்
- வியாசரின் பதில்கள்.
- செங்கை ஆழியானின்
  ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
- பொன்.கணேசமூர்த்தியின்
  கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில்
உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 20 விலை :-14.00

சங்கு நாதம்

(22-28 செப்.2003)

Sankunatham

# குரங்குபாஞ்சான் விவகாரம் பெரிதுபட கண்காணிப்புக் குழுவினரே காரணம்

## கேணல் பதுமன், திலக் கூட்டாகத் தெரிவிப்பு

(கொழும்பு)

திருகோணமலை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தமிழீழ



விடுதலைப்புலிகள் 13புதிய முகாம்களை அமைத்துள்ளதாக சமாதான விரோத அமைப்புகள் மேற்கொண்டு வரும பொய்ப்பிரசாரங்களில் எவ்வித உண்மையும் இல்லை.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமனும், மாவட்ட அரசியல் துறைப் பொறுபபாளர் திலக்கும் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் சம்பூர் நடுவப் பணியகத்தில் தமிழ், சிங்கள, ஆங்கிலப் பத்திரிகையாளர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பிலேயே அவர்கள் இருவரும் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்கள், இதனை செய்தியாளர்களாகிய நீங்கள்,தமிழ்,சிங்கள முஸ்லிம் மக்களுக்கும்,சர்வதேச சமூகத்துக்கும் தெளிவுபடுத்த வேண்டும்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சிறிய தவறு காரணமாகவே குரங்குபாஞ்சான் முகாம் விவகாரம், தற்போது சர்ச்சைக்குரிய விடயமாக உருவாகியுள்ளது.

யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு முன்னரே இந்த முகாம் அமைக்கப்பட்டுவிட்டது.

எனவே,இம்முகாம் தொடர்பான சமாதான விரோத சகதிகளின் கருத்துக்களை முறியடிப்பதற்கு, ஊடகங்களின் ஒத்துழைப்பு விடுதலைப் புலிகளுக்கு தேவைப்படுகிறது.

யுத்தநிறுத்த உடன்படிக்கைக்குப் பின்னர் திருகோணமலை மாவட்ட இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஒருமுகாம் கூட புலிகளால் அமைக்கப்படவில்லை.

எனினும்,13முகாம்கள் அமைக்கப்பட்டு விட்டதாகக் குறிப்பிடப்படும் இடங்களை நேரடியாகப் பார்க்க முடியும்.



யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின்னர் தலைவர் வே.பிரபாகரனது பணிப்புரைக்கும்,வழிப்படுத்தலுக்கும் அமைய படைபலம் ரீதியாகவும்,அரசியல் ரீதியாகவுமே கடமைகளை ஆற்றிவருகிறோம்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, மூதூர்ப் பகுதியில் உள்ள தமிழ்-முஸ்லிம் மக்களிடையே வன்முறைச் சம்பவங்கள் ஏற்படுவதற்கு மாவட்டத்துக்கு வெளியேயுள்ள முஸ்லிம் அரசியல் வர்திகளின் தலையீடே காரணம் என இருவரும் தெரிவித்துள்ளனர்.

(தி-61)

## தியாகி திலீபனின் நினைவகலா நாட்கள்



காந்திய தேசம் காக்குமென் றேமாந்தோம்

அன்னனின் ஆணையேற்று
அன்னை யெம் தமிழிற்காய்
ஆருயிர் தனை வழங்கும்
ஆயிர மாயிர வரில்
உன்னரும் கொள்கைக் காக
ஒரு துளி நீரருந் தாது
பன்னிரு நாட்க ளிங்கே
பட்டினி கிடந்து செத்தாய்
காந்திய தேசம் எம்மைக்
காக்கு மென் றே மாந்தோம்
சாந்தியை விரும்பு வோர்கள்
தடுப்ப ரென்று ஏமாந்தோம்
வாந்தி தான் எடுக்கு திந்த
வஞ்சகர் செயலை எண்ண
மீந்திடும் நாளி லேனும் உன்
வேணவா தீர்க்கப் பார்ப்போம்

அன்னைதாஸன்







யாழ். குடாநாட்டில் நேற்று இடம்பெற்ற போலியோ வழங்கும் நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள்:
(படங்கள். க.பவன்)

## மாடுகளுக்குத் தடுப்பூசி

(ஊர்காவற்றுறை)

அனலைதீவில் உள்ள மாடுகளுக்கு எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை முதல் 27ஆம் திகதி வரை தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி இலவசமாக ஏற்றப்படவுள்ளது

வேலணை கால்நடை வைத்திய நிலையம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

தொடர்ந்து ஊர்காவற்றுறை பிரதேசத்திலும் மாடுகளுக்கு மேற்படி தடுப்பூசி போடப்படவுள்ளது.(உ-75)

# அகாஷியின் இலங்கை விஜயம் குறித்து ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி அதிருப்தி

## ஜப்பான் தூதருக்கு விரிவான கடிதம்

(கொழும்பு)

ஜப்பானின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசூசி அகாஷியின் இலங்கை விஜயம் விடுதலைப் புலிகளை திருப்திப் படுத்தும் வகையிலேயே திட்டமிடப்பட்டதாகத் தோன்றுகின்றது.

கொழும்பில் எமது கட்சித் தலைவர்களைச் சந்திப்பதற்கான வாய்ப்பு நிராகரிக்கப்பட்டதோடு, கிழக்கில் கட்சிப்பிரதிநிதிகள் கூட்டங்களில் பங்கேற்கும் வாய்ப்பு திட்டமிடப்பட்டு தவிர்க்கப்பட்டதானது இதையே காட்டுகின்றது.

இவ்வாறு அதிருப்தி தெரிவித்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, கொழும்பில் உள்ள ஜப்பானியத் தூதுவர் சிசிரோ ஒட்சுகாவுக்கு விரிவான கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும்,

போர்நிறுத்த உடன்படிக்கையானது வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழும் சாதாரண மக்களின் குறிப்பாக தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் அடிப்படை மனிதஉரிமைகளைப் பேணுவதில் வலுவற்றதாகவுள்ளது. இது அரசியல் பன்மைத்துவம் மற்றும் ஜனநாயக அரசியல் செயற்பாடுகளுக்கு இடம் அளிப்பதாக இல்லை.

போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்தானது முதல்வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களின் அடிப்படை மனித உரிமைகளை பேணுவதற்காகவும் ஜனநாயகம் மற்றும் அரசியல் பன்மைத்துவம் என்பவற்றை நிலைநாட்டுவதற்காகவும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் வெகு சிரமங்களுக்கு மத்தியில் முன்னின்று தலைமை தாங்கி வருகின்றோம். இந்த இலக்கை நிறைவேற்றுவதற்காகவே இங்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் சந்தித்துப் பேசி வருகிறோம்.

இந்த வகையில், உங்களைச் சந்தித்த சந்தர்ப்பங்களில் எல்லாம் எமது நிலைப்பாட்டை தெரியப்படுத்தியிருக்கின்றோம். இதற்காகவே கடந்த செப்ரெம்பர் 12ஆம் திகதி அன்றும் ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷியை சந்தித்துப் பேசுவதற்காக நாம் வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

கடந்த செப்ரெம்பர் 14ல் புலிகளின இரண்டாம் மட்டத்தினரைச் சந்திப்பதற்காக கிளிநொச்சி வரை விசேட தூதுவர் யசூசி அகாஷி சென்றார்.

அதைத் தொடர்ந்து கல்முனை மற்றும் அம்பாறை ஆகிய பகுதிகளுக்கும் விஜயம் செய்தார்.அங்கு இடம்பெற்ற சந்திப்புகளின் போதும் ஈ.பி,டி.பி மற்றும் புளொட் , ஈ.பி. ஆர். எல். எவ்.(வரதர் அணி) பிரதிநிதிகள் திட்டமிட்டவகையில் தவிர்க்கப்பட்டுள்ளனர்.இக்கட்சிகள்தான் பயங்கரவாதப் போக்குகளுக்கு எதிராகத் துணிவுடன் செயற்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

ஆகஸ்ட் 19ஆம் திகதியன்று நாம் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு எழுதிய கடிதத்தில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழும் சாதாரண மக்களின் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்படவேண்டும் என்று கேட்டிருந்தோம்.

மனித உரிமைகள், ஜனநாயக அரசியல் பன்மைத்துவம் என்பன பற்றி ஜப்பான் போன்ற நாடுகள் பேசுவது வெறும் வாய்ச்சொற்கள் தானா என்ற சந்தேகம் எம்மவர்கள் மத்தியில் தற்போது தோன்றியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## ஈழவேந்தனின் உரை

(யாழ்ப்பாணம்)

"பாரதியும், பாரதிதாசனும் ஈழத் தமிழினத்தில் ஏற்படுத்திய தாக்கம்" என்னும் பொருள் பற்றி தமிழீழ விடுதலை அணியின் செயலாளர் மா.க. ஈழவேந்தன் நாளை திங்கட் கிழமை காலை 8.30 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் உரையாற்றவுள்ளார். (உ)

## மணிக்கூட்டுக் கோபுரம்

(தொல்புரம்)


தொல்புரம் பத்தானையம்பதி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்திற்கு 2 இலட்சம் ரூபா செலவில் மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது.(உ-70)

# பொடாச் சட்டம் உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டும்

## பாதுகாப்பு அமைச்சரிடம் கலைஞர் வலியுறுத்து

(புதுடில்லி)

தி.மு.க. தலைவர் கருணாநிதி பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸைச் சந்தித்து பேச்சு



வார்த்தை நடத்தியுள்ளார்.

சென்னை அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அமைச்சர் முரசொலிமாறனின் உடல் நலம் குறித்து மருத்துவர்களிடம கேட்டறிந்து கொண்ட அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், அங்கு வைத்து கருணாநிதியையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பொடாச் சட்டத்தை மத்திய அரசு உடனடியாக திரும்பப் பெறவேண்டுமெனவும், இல்லையெனில் தி.மு.க. எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பது குறித்து கட்சியின் மாநாட்டில் முடிவு எடுக்கப்படுமெனவும் கருணாநிதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே கருணாநிதியைச் சந்தித்த அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ்,பொடாச்சட்டம் குறித்து தீர்மானம் எதையும் நிறைவேற்றிட



வேண்டாம் என மத்திய அரசின் சார்பாக கேட்டுக்கொண்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. (உ-9)



இந்தியா, ஆபிரிக்கா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளில்தான் எய்ட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பீஜிங்கில் உள்ள ஒரு மருத்துவமனையில் தனது எதிர்கால வாழ்வு குறித்துச் சிந்திக்கும் எச்.ஐ.வி. வைரஸ் பாதிக்கப்பட்ட ஒரு சிறுவன்.

## அமெரிக்காவில் வீசும் சூறாவளியால் 23பேர் பலி

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் கிழக்குக் கரையோரப் பகுதிகளில் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்திவரும் ''இஸபெல்'' எனும் சூறாவளி காரணமாக 23பேர் இதுவரை உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சூறாவளியால் வேர்ஜினியாவில் மட்டும் 14பேர் உயிரிழந்ததாக அவசர பணிகளுக்கான நிர்வாகத் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்களில் பெரும்பாலானோர் வாகன விபத்துக்களினாலும் மரங்கள் வீழ்ந்ததாலும் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், வடகரோலினா,மேரிலேண்ட் மற்றும் பென்சில் வேனியா, வாஷிங்டன் ஆகிய நகரங்களிலும் உயிரிழப்புக்கள் இடம்பெற்றிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, றோத்தீவில் கரையோரமாக உலாவிக் கொண்டிருந்த 66 வயது முதியவர் ஒருவர் சுமார் 8அடி உயரத்துக்குவீசிய கடலலையில் அள்ளுண்டு செல்லப்பட்டு பின்னர் கரையோரப் பாதுகாப்புப் படையினரின் ஹெலிகொப்ரர் மூலம் மீட்கப்பட்டார். (உ-2)

# பலஸ்தீன அமைப்புக்களை சமாதானப் பாதைக்கு அழைத்துவர முடியும்

## யஸீர் அரபாத் நம்பிக்கை


(ரெல்அவிவ்)

பலஸ்தீன அமைப்புக்களை வேட்டையாடுவதை இஸ்ரேல் நிறுத்தினால்,அவ் அமைப்புக்களைச் சமாதானப் பாதைக்குத் திரும்புமாறு தன்னால் அழுத்தங்களைக் கொடுக்க முடியுமென பலஸ்தீனத் தலைவர் யஸீர்அரபாத் தெரிவித்துள்ளார்.

உலக தரிசனம்

இஸ்ரேலியப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியின் போதே யசீர்அரபாத் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.சபையின் பாதுகாப்புத் தீர்வையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அமெரிக்கா தோல்வியடையச் செய்ததைத் தொடர்ந்து அரபாத் இவ்வாறு கூறியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.



அதேவேளை,உலகில் எவர் எடுக்கும் முடிகளாலும் பலஸ்தீனத்தை அசைத்துவிட முடியாது என அரபாத் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

# பிலிப்பைன்ஸில் மீண்டும் அமைதியை நிலைநாட்ட நோர்வே திட்டம்

(ஆஸ்லோ)

பிலிப்பைன்ஸ் அரசாங்கத்துக்கும் அந்த நாட்டின் மிகப்பெரிய முஸ்லிம் தீவிரவாத குழுவிற்கும் இடையிலான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னின்று நடத்துவதற்கு நோர்வே திட்டமிட்டுள்ளது.


இந்தவிடயம் தொடர்பாக நோர்வேயில் மிகவிரைவில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளதாக நோர்வே வெளிவிவகார அமைச்சின் பெண் பேச்சாளரான ஹியூரி ஷெல்பேக் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும்,இந்தப் பேச்சுவார்த்தைகள் எப்போது ஆரம்பமாகும் என்பது குறித்து அவர் தெரிவிக்கவில்லை .

பிலிப்பைன்ஸில் சுமார் 3தசாப்த காலமாக இடம்பெற்றுவந்த பிரிவினைவாத யுத்தத்துக்கு முடிவு கட்டும் பொருட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவந்த போதிலும்,2001 ஆம் ஆண்டில் அந்த முயற்சிகள் முறிவடைந்தன.

எவ்வாறாயினும்,பிலிப்பைன்ஸ் அரசாங்கத்துக்கும் முஸ்லிம் தீவிரவாதிகளுக்குமிடையே பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு மலேசியா முயற்சிகளை மேற்கொண்டு வந்தது.

அந்தப் பேச்சுவார்த்தைகளும் எதிர்பார்த்த வெற்றி அளிக்காத நிலையில், நோர்வே இவ்விடயத்தில் தலையிட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து வைப்பதற்கான திட்டங்களை மேற் கொண்டு வருகின்றது. (உ-9)



அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலீஸ் நகரில் ஒட்டிப் பிறந்த 9 மாத பெண் குழந்தைகள், கடந்த வாரம் அறுவைச் சிகிச்சை மூலமாகப் பிரிக்கப்பட்டன. அந்தக் குழந்தைகளின் உடல்நலத்தில் நல்ல முன்னேற்றம் இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



மும்பையில் உள்ள மசூதி ஒன்றில் ஒரே நேரத்தில் 525 தாவூட் போஹ்ரா இன முஸ்லிம் ஜோடியினருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது. மசூதியில் நடைபெற்ற தொழுகையில் அமர்ந்திருக்கும் மணப்பெண்கள்.

## முரளி மனோகர்ஜோசி பதவி துறந்தார்

(புதுடில்லி)

இந்தியாவின் அயோத்திப் பிரதேசத்தில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக குற்றச்சாட்டுக்கு இலக்காகியிருந்த இந்திய மத்திய அமைச்சர் ஒருவர் இராஜினாமாச் செய்துள்ளார்.

மனிதவள அபிவிருத்தி அமைச்சர் முரளி மனோகர்ஜோசியே தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

1995 ஆம் ஆண்டு மசூதி இடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அப்போதைய ஆளும் கட்சியைச் சேர்ந்த 8 பேரிலே 7 பேருக்கு எதிராகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து வழக்குத் தொடருமாறு உத்தரப் பிரதேச நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்டிருந்த துணைப் பிரதமர் அத்வானிக்கு எதிரான வழக்கு விசாரணைகளை நீதிமன்றம் தள்ளுபடி செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. (உ-9)

# முரண்பாடுகளுக்குத் தீர்வுகாண முக்கிய நாடுகள் ஒன்று கூடின

(நியூயோர்க்)

ஈராக்கிற்கு எதிராக போர் தொடுக்கும் விடயத்தில் பல்வேறு முரண்பாடுகளைச் சந்தித்து வந்த ஜேர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் அவற்றைச் சீர்செய்யும் பொருட்டு நேற்று பேர்ளினில் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியுள்ளன.

ஜேர்மன் அதிபர் ஜெஹாட்ஸ் ரேடர்,பிரான்ஸ் ஜனாதிபதி ஜக்ஷெராக்,பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் ஆகியோரும் இந்த முக்கிய பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டுள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது போரினால் சீரழிந்து போயுள்ள ஈராக்கை மீளக்கட்டியெழுப்புவதற்கான பிரேரணை ஒன்றை ஐ.நா. சபையில் சமர்ப்பிப்பதற்கான ஆலோசனைகளை நடத்தியுள்ளனர்.

ஈராக் போரினால் ஐரோப்பிய ஒன்றியத்தில் ஏற்பட்ட பிளவுகளை சீர்செய்வதற்கான பொதுவான விடயங்களும் நேற்றைய பேச்சுவார்த்தையின் போது முக்கியகவனத்தில் கொண்டுள்ளதாக ஜேர்மனி அறிவித்துள்ளது.

(உ-9)

## சிறு விளம்பரம்

**வியாழன்,ராகு,கேது**
**மாற்றங்கள் உங்களுக்கு எப்படி?**

எங்கும் விற்பனையாகின்றது 15/= கணிப்பாசிரியர்-சத்யா, ஆனைக்கோட்டை யுத்தச் செவ்வாய், வியாழன், பகைச்சனி, ராகுகேதுக்கள் ஒன்றுக்கொன்று பரஸ்பர கெட்டபார்வைகளால் இடைக்கால நிர்வாகம் ஸ்தம்பிதம், இராணுவ முனைப்புக்கள், போர் முஸ்தீபுகள், அரசியல் நெருக்கடிகள் இவ்வருடமுடிவில் அதிகரிக்கும்.

**பத்தாயிரம் பனம்பழம் சேகரித்தல் போட்டி- 2003**

ஆர்வமுடையோர் எழுத்து மூலம் பதிவுகளை மேற் கொள்க. விண்ணப்ப முடிவு திகதி:10.10.2003 தொடர்புக்கு: சிவதர்சினி, பனம் பொருள் உற்பத்தி நிறுவகம், நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

(7481)

# தமிழ் முஸ்லிம் சமூகங்கள் இடையே மனமாற்றம் ஏற்படுவது அவசியம்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை முஸ்லிம் மக்களும்,என்னைத் தமிழ் மக்களும் சந்தேகக் கண்ணோட்டத்துடனேயே நோக்குகின்றனர்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீம் நேற்று முனதினம் செம்மண் ஓடையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர் , இரு சமூகங்கள் இடையே இது குறித்த மனமாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பதுடன் அங்குள்ள குரோதங்களும் களையப்பட வேண்டும்.

கிழக்கு அபிவிருத்தி அமைச்சு ஊடாக வழங்கப்படும் அனைத்து அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் அங்குள்ள மக்களின் விகிதாசாரத்துக்கு அமையவே வழங்கப்பட்டுள்ளன. கிழக்கு அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு அபிவிருத்தித் திட்டங்களின் போதும்,பாரபட்சம் காட்டப்பட மாட்டாது

கிழக்கிலுள்ள தமிழ் பிரதேசங்களுக்குச் செல்ல முடியாத சூழ்நிலை இருப்பதால்,அங்கு என்னால் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் தடைப்பட்டுள்ளதால் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்ள முடியவில்லை என நோர்வேப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (தி-60)

# திரு விவிலிய மறைக்கல்வி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மறைக்கல்வி நடுநிலையத்தின் ஏற்பாட்டில்,நாளை முதல் எதிர்வரும் 28ஆம் திகதி வரையான 5தினங்கள் திரு விவிலிய மறைக் கல்வி விழா இடம்பெறவுள்ளது.

இதில்,கண்காட்சி,மறைக்கல்வித் திரைப்படங்கள்,விவிலிய விளையாட்டுக்கள் என்பன இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம்.பருத்தித்துறை மறைக்கோட்டத்தினர் இவற்றில் பங்கேற்கவுள்ளனர். (உ-7)

# அடிப்படை வசதிகளில்லை

(பளை)

தாளையடி றோ.க.த.க.பாடசாலை அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் இயங்கி வருகின்றது.

தரம் 1முதல் தரம் 9வரையான வகுப்புக்களுடன் இவ்வாண்டின் இரண்டாம் தவணையில் இருந்து தனது சொந்த இடத்தில் இயங்கி வரும் மேற்படி பாடசாலையில் சுமார் 93 மாணவர்கள் கல்வி பயின்று வருவதாகவும்,இங்கு பெருமளவு தளபாடப் பற்றாக்குறை ஆசிரியர் பற்றாக்குறை என்பன நிலவி வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (உ-97)

# கரப்பந்தாட்ட நடுவர் பரீட்சை யாழ்.மாவட்டத்தில் 18 பேர் சித்தி

(சுண்டிக்குளி)

அகில இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனம் கடந்த ஏப்ரல் மாதம் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சமாசம், யாழ்.கல்வித்திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழப்பாணத்தில் நடத்திய நடுவர்களுக்கான பரீட்சையில் 18 பேர் சித்தியடைந்துள்ளனர்.

யாழ்.கரப்பந்தாட்ட வரலாற்றில் தமிழ் மொழியில் முதல்முதலாக யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட இப் பரீட்சையில் மன்னார், கிளிநொச்சி ஆகிய இடங்களிலிருந்து வந்தவர்களுடன் 4 பெண்கள் உட்பட 55 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்

கல்வியங்காட்டில் அமைந்துள்ள சமாசத்தின் ஆடுகளத்தில் இடம் பெற்ற செய்முறைப்பரீட்சையில், எழுத்துமூல பரீட்சையில் சித்தியடைந்த 2 பெண்கள் உட்பட 34 பரீட்சார்த்திகள் மட்டும் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களில் 18 பேர் மாத்திரமே சித்தியடைந்துள்ளனர் என அ.இ.க சம்மேளனத்தினால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எஸ்.ரமணன், என்.சுதேஸ்குமார், வி.செந்தூரன்,கே.மனோகரன், வி.ரி.செல்வராசா, எஸ்.அப்புத்துரை, கே.நாகேந்திரம், கே.யதுகுலசிங்கி, ஆர்.குகன், எம்.ஆர்.எம். யுசுமின், எஸ்.ஆர்.அருள்நேசன், எஸ்.புவனேஸ்வரன், என்.முருகதாஸ்காந்தன், ரி.றொபேட், வி.சுந்தரலிங்கம் ரி.கருணாகரன், எ.ஜே.ஏ.குறூஸ் எஸ்.மகிந்தன் ஆகியோர் சித்தியடைந்தவர்களாவர்(உ-110)

# பிரபாவின் வாழ்க்கை வரலாற்று நூலுக்கு நல்ல வரவேற்பு

## விற்பனை அமோகம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் வாழ்கை வரலாற்றை, இந்தியாவின் பிரபல எழுத்தாளர் எம்.ஆர்.நாராயணசாமி ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட 'ஆழம் காணமுடியாத அகத்தினுள் பிரபாகரன்'(**Inside an Elusive Mind Prabakaran**) எனும் நூல் அமோகமாக விற்பனையாகிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் தற்போது இடம் பெற்றுவரும் சர்வதேச புத்தகக் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள இந்நூல் ரூபா 799 க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இந்நூலானது, கடந்த மூன்று நாட்களிலேயே 975 பிரதிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதையடுத்து விற்பனைக்காக மேலும் 3ஆயிரம் பிரதிகள் தருவிக்க கொழும்பு விஜிதயாப்பா புத்தக நிலையம் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

அதேவேளை, மேற்படி நூலில் மூலப்பிரதி இந்தியாவின் டில்லி கோனார் பதிப்பகம் மற்றும் கொழும்பு விஜிதயாப்பா பதிப்பகம் ஆகியவற்றால் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

# நூலகர் பற்றாக்குறை

(நவாலி)

வட்டுக்கோட்டை பொது நூலகத்தில் நிரந்தர நூலகர்களுக்குப் பற்றாக்குறை காணப்படுவதால் அந்நூலகப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. (உ-102)

# உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

(கந்தரோடை)

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்டு வந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிகள் கடந்த வியாழனன்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

மேற்படி போட்டிகளில் 14 வயதுப் பிரிவிலே சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து விளையாடிய இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

16 வயதுப் பிரிவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியை எதிர்த்து விளையாடிய மானிப்பாய்



# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஜே.வி.பி.ஆலோசனை

(கொழும்பு)

ஜே.வி.பி-ஸ்ரீ.சு.க.கூட்டணி தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமாயின் ஸ்ரீ.சு.க. நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டுமென ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இரு கட்சிகளும் கூட்டணி அமைப்பது தொடர்பாக நடத்திய பேச்சு

ஸ்ரீ.சு.க ,ஜே.வி.பி ஆகிய கட்சிகள் கூட்டணி அமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தோல்வியடைய வேண்டும் எனப் பலரும் எதிர்பார்த்திருந்தனர்.

இவ்வகையில் கூட்டணி தொடர்பான பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்தமையால் அதிருப்தி தோன்றினாலும் எங்கள்

சமாசத்தின் ஆடுகளத்தில் இடம் பெற்ற செய்முறைப்பரீட்சையில், எஸ்.மகிந்தன் ஆகியோர் சித்தி டைந்தவர்களாவர்(உ-110)

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஜே.வி.பி.ஆலோசனை

(கொழும்பு)

ஜே.வி.பி-ஸ்ரீ.சு.க.கூட்டணி தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமாயின் ஸ்ரீ.சு.க. நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டுமென ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இரு கட்சிகளும் கூட்டணி அமைப்பது தொடர்பாக நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்திருந்தாலும் நாட்டின் இறைமையையும் பாதுகாப்பையும் கருத்தில் கொள்ளவேண்டும் என ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

ஸ்ரீ.சு.க ,ஜே.வி.பி ஆகிய கட்சிகள் கூட்டணி அமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தோல்வியடைய வேண்டும் எனப் பலரும் எதிர்பார்த்திருந்தனர்.

இவ்வகையில் கூட்டணி தொடர்பான பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்தமையால் அதிருப்தி தோன்றினாலும் எங்கள் நிபந்தனைகளை விட்டுக் கொடுத்து சுதந்திரக் கட்சிபோன்று பெரிய கட்சிகளுடன் இணைய முடியாது.

எவ்வாறாயினும் சுதந்திரக்கட்சி நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடித்தால் பேச்சுவார்த்தைகளை மீண்டும் முன்னெடுக்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

(உ-8)

## வேலைவாய்ப்பு பெறுவதில் விழிப்புடன் இருக்க வேண்டும்

### வேலைவாய்ப்புப் பணியகம் எச்சரிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் ஒன்று இயங்கி வருவதாகவும் இதுகுறித்துப் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டுமெனவும் இலங்கை வேலைவாய்ப்புப்பணியகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அகில இலங்கை மத்திய கிழக்குச் சங்கம் என்ற பெயரில் இயங்கி வரும் இந்த நிறுவனம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஆவணங்களைக்காட்டி மக்களிடம் பணம் பறிமுதல் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து பணியகத்தின் விசாரணைப்பிரிவு மேற்கொண்ட விசாரணைகளின் படி நீர்கொழும்பில் இம் முகவர் நிலையத்தின் தலைமையகம் இயங்கிவருவதாகவும் மத்திய கிழக்கில் தொழில்வாய்ப்பு பெற்ற பலர் இந்த முகவர் நிலையத்தின் உறுப்பினர்களாக உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அத்துடன் உறுப்பினர்களிடம் அங்கத்துவக் கட்டணமாக 100 ரூபா பெறப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறான ஏமாற்று நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் பற்றித் தகவல் அறிந்தால் 01-2368791என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்கும்படி இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் சுசந்த பெர்னாண்டோ கேட்டுள்ளார்.(உ8)

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உதவுபொருட்கள்

(கல்வயல்)

வன்னியில் இருந்து மீளக்குடியமர்ந்துள்ள தென்மராட்சிப் பிரதேச மக்களுக்கு 'யூ.என்.எச்.சி.ஆர்' நிறுவனம் சமையல் பாத்திரங்கள், மற்றும் தொழில்சார் உபகரணங்கள் உள்ளிட்ட பல உதவிப் பொருட்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய மீளக் குடியமர்ந்துள்ள மக்களின் விபரங்களை இந் நிறுவனம் திரட்டி வருகின்றது.

(உ-36)

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்டு வந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிகள் கடந்த வியாழனன்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

மேற்படி போட்டிகளில் 14 வயதுப் பிரிவிலே சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து விளையாடிய இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

16 வயதுப் பிரிவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியை எதிர்த்து விளையாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 7:6 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

18 வயதுப் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து விளையாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 4:1 கோல்கணக்கில் பெற்று வெற்றியீட்டியுள்ளது.

(உ-103)

## வங்கிச் சேவை

(பளை)

முழங்காவில் பிரதேச மக்களின் நலன்கருதி கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளையினர் நடமாடும் வங்கிச் சேவையினை அங்கு மேற்கொண்டு வருகின்றனர். (பி-97)

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 26-ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள நவராத்திரி விழா,தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் இடம் பெறவுள்ளதுடன் தொடர்ந்து 9 நாட்களும் விஷேட வழிபாடுகளும் நடைபெறவுள்ளன.

(உ-18)

## மன்னார் அணி வென்றது

(மருதங்கேணி)


அகில இலங்கை ரீதியாக 19 வயதிற்குட்பட்ட பாடசாலை மாணவர்கிடையே கொழும்பில் நடாத்தப்பட்ட கால் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அணி சம்பியனாகியது.

கடந்த திங்களன்று கொழும்பில் இடம் பெற்ற மேற்படி போட்டியில் வென்னப்புவ ஜோசப் வாஸ் கல்லூரி அணியை எதிர்த்து விளையாடிய மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.(உ-35)





வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச்சபை நெடுந்தீவில் நடாத்திய இலவசக் கண் வைத்திய முகாமை விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் புலிக்கொடியை ஏற்றி ஆரம்பிப்பதை முதலாவது படத்திலும்,கண்பார்வை குறைந்த ஒருவருக்கு இலவச மூக்குக் கண்ணாடி அணிவிக்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.



நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் 6ஆம் ஆண்டில் ஆங்கிலமொழி மூலம் கல்விபோதிக்கும் திட்ட ஆரம்ப விழாவிலே வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (படங்கள் பரு.நிருபர்)

## பட்டம்,பதவி எனக்குப் பொருட்டில்லை

# படையினரின் சர்வாதிகாரப் போக்கை கண்டித்துக் குரல் கொடுப்பேன்

## அமைச்சர் மகேஸ்வரன் தெரிவிப்பு

(லண்டன்)

**யாழ். மாவட்ட மக்களுக்கு பெரும் இடையூறாக இருக்கும் உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கு இன்னும் சில தினங்களுக்குள் தீர்வு காணப்படாது விட்டால் எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பாராளுமன்றில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளேன்.**

**இதனால், எனது பதவி பறிபோகும் அபாயம் கூட ஏற்படலாம். இருந்தாலும் எமது மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால் பதவியைப் பற்றிக் கவலைப்படமாட் டேன் அதுபற்றி பரிசீலனை மேற்கொள்வேன்.**

இவ்வாறு,இந்துக்கலாசார அமைச சர் தி.மகேஸ்வரன் வெளிநாட்டு



ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ் வியில் தெரிவித்துள்ளார்.

பெரும் எதிர்பார்ப்புக்களுடனேயே நாம் கடந்த வியாழனன்று உயர் பாது காப்பு வலயங்களில் மக்களை மீளக குடியமர்த்துவது குறித்த உயர் மட்ட மாநாட்டைக் கொழும்பில் நடத்தினோம்.

ஆனால்,அம் மாநாட்டில் எடுக்கப் பட்ட முடிவுகள் எமக்கு பெரும் தோல வியைத்தான் தந்திருக்கின்றன.

குருநகர்,பாசையூர், கொழும்புத் துறை, மணியந்தோட்டம், அரி யாலை, மறவன்புலோ போன்ற பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்த வேண்டும்.

பருத்தித்துறை பிரதேசத்தில் உள்ள இரு பிரதான கல்லூரிகளான மெதடிஸ்த கல்லூரி, ஹாட்லிக் கல் லூரி மற்றும் பருத்தித்துறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கட்டடத் தொகுதிகள் , எரிபொருள்

வற்றில் உள்ள இராணுவக் காவல ரண்களை அகற்றி,உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களை நீக்கி, மக் கள் மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத் தோம்.

ஆனால், எமது இக்கோரிக்கை களை அவர்கள் முற்றாக நிராக ரித்து விட்டார்கள்.

1990ஆம் ஆண்டு தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேறிய எமது மக்கள் 13 வருட காலமாக அகதி முகாம்களிலும் சிறு குடிசை களிலும் பெரும் அசௌகரியங் களை எதிர்நோக்கிய வண்ணம் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இது குறித்து பல தடவைகள் இராணுவ உயர் அதிகாரிகளுடன் நான் கதைத்தும் கூட எந்தவித பலனும் இல்லை.

இருந்து கொண்டு பார்த்துக் கொண் டிருக்க முடியாது.

இராணுவத்தினரின் அத்துமீறல் நடவடிக்கையாக நாம் இதனைக் கருதுவதுடன், அவர்களின் சர்வாதி காரப் போக்கைக் கண்டித்து நான் எதிர்வரும் செவ்வாயன்று பாராளு மன்றில் எனது பகிரங்கமான எதிர்ப் பைக் காட்டவுள்ளேன் என்றார்.

(உ-62,10)

# இலங்கை அகதிகள் சென்ற வான் செங்கல்பட்டில் விபத்துக்குள்ளானது

## நால்வர் உயிரிழப்பு

(கொழும்பு)

தமிழ்நாடு சேலம் மாவட்டத் தில் இருந்து சென்னை நோக்கிச் சென்ற வான் ஒன்று விபத்திற்குள்ளா னதில் அதில் பயணம் செய்த இலங்கை அகதிகள் நால்வர் உயிரிழந்துள்ள துடன்,9பேர் காயமடைந் துள்ளனர்.

சேலம் அகதி முகாமில் இருந்து நேற்றுக்காலை புறப்பட்டுச் சென்ற மேற்படி வான் செங்கல்பட்டுக்கு அருகே மறைமலை நகரில் உள்ள புளியமரம் ஒன்றுடன் மோதியே விபத்திற்குள்ளானது.

இதேவேளை, மேற்படி விபத்தில் காயமடைந்த 9 பேரும் செங்கல்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக் காக சேர்கப்பட்டுள்ளனர் என்றும், இவ் விபத்து தொடர்பான விசாரணை களைத் தமிழகப் பொலிஸார் மேற் கொண்டு வருவதாகவும் தமிழகச் செய்திகள் தெரிவித்துள்ளன.

(உ-61.10).

# அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் தோல்வி

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக நேற்று முன்தினம் கண்டியில் நடாத்தப்பட்ட

ஆதரவாளர்களுக்கும் ஆர்ப்பாட்ட ஏற்பாட்டாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் கார



ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்,

குருநகர்,பாசையூர், கொழும்புத்துறை, மணியந்தோட்டம், அரியாலை, மறவன்புலோ போன்ற பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்த வேண்டும்.

பருத்தித்துறை பிரதேசத்தில் உள்ள இரு பிரதான கல்லூரிகளான மெதடிஸ்த கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி மற்றும் பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கட்டடத் தொகுதிகள் , எரிபொருள் நிலையம் , தபால் கந்தோர் அங்குள்ள இரு கோயில்கள் ஆகிய

1990ஆம் ஆண்டு தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேறிய எமது மக்கள் 13 வருட காலமாக அகதி முகாம்களிலும் சிறு குடிசைகளிலும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கிய வண்ணம் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இது குறித்து பல தடவைகள் இராணுவ உயர் அதிகாரிகளுடன் நான் கதைத்தும் கூட எந்தவித பலனும் இல்லை.

எனவே,நாங்கள் இவற்றையெல்லாம் மக்களின் பிரதிநிதியாக

# அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் தோல்வி

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக நேற்று முன்தினம் கண்டியில் நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டப்பேரணி எதிர்பார்த்தளவு வெற்றியளிக்கவில்லை.

பொது ஜனஜக்கிய முன்னணி ஆதரவாளர்களுக்கும் ஆர்ப்பாட்ட ஏற்பாட்டாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாகவே இது வெற்றி அளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், அங்கு வருகை தருவதாகக் கூறியிருந்த பொதுஜன ஜக்கிய முன்னணியின் ஊடகப்பேச்சாளர் சரத் அமுனுகமவும், பாராளுமன்ற உறுப்பினர் அனுராபண்டார நாயக்கவும் கூட வருகை தரவில்லை.

அரசாங்கத்துக்கு எதிரஈக கண்டியில் நடைபெற்ற முதலாவது ஆர்ப்பாட் டம் இதுவென்பது குறிப்பிடத் தக்கது. (தி-60)

# அபிலாஷைகளை வெளிப்படுத்துவதில் புலிகள் மிகவும் அக்கறை கொண்டுள்ளனர்

## பதில் யோசனை அனுப்புவது தாமதமடைய இதுவே காரணம் -விதார் விளக்கம்

(லண்டன்)

தமிழீழ விடுதலைப்புலிகள் இடைக்கால நிர்வாக சபை குறித்த தமது திட்டத்தை தயாரிப்பதற்கு கூடுதலான காலத்தை எடுத்து வருவது, அவர்கள் தங்களின் அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்துவதில் எவ்வளவு அக்கறையுடன் செயற்படுகின்றார்கள் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

இவ்வாறு, நோர்வேயின் துணை வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன் நேற்று முன்தினம் பி.பி.சி.க்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இடைக்கால நிர்வாகத்திற்கான தங்களின் ஆலோசனைகள் அடுத்த மாத நடுப்பகுதியில் அரசிடம் கையளிக்கப்படும் என விடுதலைப்புலிகள் எமக்கு தெரிவித்துள்ளனர்.

இதிலிருந்து விடுதலைப்புலிகள் தமது அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்துவதில் எவ்வளவு அக்கறையுடன் செயற்படுகின்றார்கள் என்பதை நன்கு உணர முடிகின்றது. இது வரவேற்கத்தக்கதோர் அம்சமாகவும் உள்ளது.

தமிழீழவிடுதலைப்புலிகள் அரசிடம் தமது திட்டவரைபை சமர்ப்பிக்கும் போது ''இது தான் எங்களின் திட்டம்.ஏற்றுக்கொள்ள முடியுமானால் ஏற்றுக்கொள்ளுங்கள் இல்லாவிட்டால் விட்டு விடுங்கள்'' என்ற பிடிவாதப்போக்கை கடைப்பிடிக்கமாட்டார்கள்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்கப்படுவதற்கு முன்னர் தங்களின் திட்டம் முற்று முழுதாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தவும் மாட்டார்கள்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் இப்பிரச்சினைக்கு ஓர் நடு நிலையான தீர்வைக் காணும் முயற்சிக்கான வாய்ப்பாக இருக்கும் என்பதையே அவர்கள் உணர்ந்திருக்கின்றார்கள்.

சமாதானப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட தேக்க நிலை மக்களின் வாழ்வை மேம்படுத்தும் முயற்சிகளை பெரிதும் பாதித்து இருப்பதை நாங்கள் நன்கு உணர்ந்துள்ளதாகவும், ஆயினும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடக்கும்போதே அபிவிருத்தி வேலைகளும் தொடர்ந்து நடக்க முடியும் என்றும் விடுதலைப் புலிகள் எமக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

இடைக்கால நிர்வாகம் ஊடாகத்தான் வடக்கு-கிழக்கில் அபிவிருத்தி மற்றும் புனரமைப்பிற்குத் தேவையான நிதி வழங்கப்படவேண்டும் எனத் தமிழீழவிடுதலைப்புலிகள் வலியுறுத்திக் கூறிவருகின்றனர்.

இது ஓர் இக்கட்டான சூழ்நிலையை அரசிற்கு ஏற்படுத்தியிருந்தாலும், இடைக்கால நிர்வாகம் பற்றி ஆராயப்படவுள்ள நிலையில், அரசிற்கும்,விடுதலைப்புலிகளிற்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் இது குறித்து ஆராயலாம்.

மோசமான போர்நிறுத்த உடன்படிக்கை மீறல்கள் நடந்தாலுங்கூட சமாதான முயற்சிகளுக்கு தெற்கில் இன்னும் ஆதர்வு இருந்து வருகிறது என்று குறிப்பிட்டார்.

இதற்கிடையில்,போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணிகள் பற்றி சிலர் தவறான கருத்துக்களைக் கூறிவருகின்றனர் எனச் சுட்டிக் காட்டிய அவர்,

போர்நிறுத்த மீறல்கள் குறித்து கண்காணிப்புக்குழுவினரால் தீர்ப்புக் கூற முடியுமே தவிர,தீர்வை செயற்படுத்த முடியாது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன் என்றார்.



மேலும்,போர்நிறுத்த உடன்படிக்கையினை நடைமுறைப்படுத்துவதும்,பிழைகளைத் திருத்துவதும் 58 போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களினதும் பொறுப்பு அல்ல, அவர்கள் அமைதிகாக்கும் படையினர் அல்ல,யுத்த நிறுத்த மீறல்கள் குறித்து கண்காணித்து இருதரப்பினரிற்கும் இது பற்றி ஆலோசனைகளை வழங்குவதே அவர்களின் பொறுப்பு என்று தெரிவித்தார். (உ-62,10)

## குக்குலு கங்கை மின் திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

ஆயிரத்து 500 கோடி ரூபா செலவில் அமுல் செய்யப்படவுள்ள குக்குலு கங்கை நீர்மின் உற்பத்தித் திட்டத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சம்பிரதாய பூர்வமாக நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

ஜப்பானிய நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்படும் இத்திட்டத்தினால், உளளூர் மின்சார சேவையின் 5 சத வீதமான 70 மெகா வோட்ஸ் மின் சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். (தி-60)

## ஹெல்கிசன் குழுவினர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

இலங்கைக்கு 4 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெக்கிசனும்,விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்முமம் நேற்று முன்தினம் இரவு நாடு திரும்பியுள்ளனர்.

தற்போது தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் பொருட்டு இவ்விருவரும் கடந்த புதன்கிழமை இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

இவ் விஜயத்தின் போது இவர்கள் இருவரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,தமிழீழவிடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர். சு. ப.தமிழ்ச்செல்வன் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்குமாறு வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி-61)

# பிறந்த நாளின் பலன்களை அறிந்து உங்கள் வாழ்வை இன்பமாக்குங்கள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

## சோதிடபலன்

### பிறந்தநாள் பலன்

**ஏப்ரல் 20 ஆம் திகதியிலிருந்து மே 20 ஆம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கான பலன்கள்.**

இந்த மாதத்தில் பிறந்தவர்கள் மற்றவர்களுடன் பழகும்போதும், பேசும்போதும், செயல்களில் ஈடுபடும போதும் சிறந்தவர்களாக மற்றவர்களின் கவனத்தைக் கவர்ந்து நிற்பார்கள். இப்படி இவர்கள் மற்றவர்கள் கவனத்தைக் கவர்வது என்பது இவர்கள் முயற்சி செய்யாமலே, தன்னாலேயே மிக இயற்கையாக வந்துவிடும்.

இவர்கள் எப்போதும் தமது முடிவுகளிலிருந்து ஒரு சிறிதும் விட்டுக் கொடுக்கமாட்டார்கள். எப்போதும், எதிலும் இவர்கள் சிறிதும் தளர்வதில்லை. ஆனால், ஒருவர் மீது அன்பு கொண்டாலோ, காதல் கொண்டாலோ கடைசிவரையில் விட்டுக் கொடுக்கும் தன்மையுள்ளவர்களாக மாறிவிடுவார்கள். இவர்கள் அன்பு செலுத்துபவர்களிடம் மட்டுமே மிக வளைந்து கொடுப்பார்கள்!

**மன உறுதி மிக்கவர்கள்**

எதையும் தாங்கும் மனமும், உடலும் இவர்களுக்கு உண்டு. மன உறுதி உள்ளவரையில், எப்படிப்பட்ட துன்பங்கள் வந்தாலும், கடைசிவரையில் ஈடுகொடுத்து வெற்றியைப் பெறுவார்கள். எப்படிப்பட்ட கஷ்டத்தையும் தாங்கிக் கொள்வார்கள்.

எதைப் படித்தாலும் இவர்கள் மிக எளிதில் அப்படியே மனத்தில் பதியவைத்துக்கொள்ளும் ஆற்றல் இவர்களுக்கு உண்டு. இலக்கியப் பணிகளில் இவர்களுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. சமுதாயத்தில் பலருடன் பழகுதல், இன்பமாக நேரத்தைக கழிப்பது ஆகியவற்றில் இவர்கள் பற்றுக்கொண்டு வெற்றியும் அடைவார்கள்.

நண்பர்களை மகிழவைப்பதில் இவர்கள் மிக்க மகிழ்ச்சிகொள்வார்கள். உபசரிப்பதில் இவர்கள் இணையற்றவர்கள். உணவுகளைத் தேர்ந்தெடுப்பதிலும் வீடுகளைக் கவனித்துக் கொள்வதிலும் இவர்கள் மிகச் சிறப்பானவர்கள்.

**தொழில்வாய்ப்பு**

ஒரு கம்பனியின் இயக்குநராக வாய்ப்புமிகுந்த செல்வாக்குடனும், திறமையுடனும் விளங்குவார்கள். சிறந்த தொழிற்சாலைகள் வைத்து நடாத்துவார்கள், சிறந்த உடைகளைத் தேர்ந்தெடுத்து உடுத்தி, கவர்ச்சியுடன் இவர்கள் தோன்றுவதால், இவர்கள் பணக்காரர்களாக இருந்தாலும் இவர்களிடம் உண்மையாக உள்ள பணத்திற்கு மேலேயே மற்றவர்கள் மதிப்பார்கள்.

உணர்ச்சிகளாலும், அன்பாலும் மட்டுமே இவர்கள் தமது வாழ்க்கைப் பாதைகளை அமைத்துக் கொள்கிறார்கள். ஆசையை விட அன்புதான் இவர்களிடம் மிகுந்து காணப்படும்.

இவர்களிடம் மற்றவர்கள் அன்பு செலுத்தத் தொடங்கினால், அவர்களுக்காக எப்படிப்பட்ட தியாகங்களையும் மிக எளிதில் செய்யத் தொடங்கிவிடுவார்கள. ஆனால், எதிரிகளாக மாறிவிட்டால், இறுதி வரையில் விட்டே கொடுக்காமல் போரிடுவார்கள். வெளிப்படையாகவே மற்றவர்களை எதிர்ப்பார்களே தவிர, மறைமுகமாகத் தாக்குவதோ, ஏமாற்றுவதோ, பழிதீர்ப்பதோ இவர்களுக்குப் பிடிக்கவே பிடிக்காது. அதே நேரத்தில் சமரசம் செய்துகொள்ளவும் முன்வர மாட்டார்கள்.

தாம் எதற்காக எப்படி எப்போது சண்டை போடப் போகிறோம் என்பதை எதிரியினிடமே அறிவித்து விடுவார்கள். இதனால், தொடக்கத்தில் இவர்கள் தோல்வியும் அடைவார்கள். இதன் விளைவாக இவர்கள் கொதிப்படைந்து எழுச்சியுற்று, கடைசி வரையில் இரண்டிலொன்று பார்த்துவிடுவது என்று போரிடுவார்கள்!

சுற்றுப்புறத்திற்கு ஏற்றபடி இவர்கள் மாறிவிடுவதுண்டு. ஆனால், தம்மைப் போன்றவர்களுடன் சேர்ந்து வாழும்போது, இவர்கள் அலுப்பு அடைவார்கள்.

இந்த மாதத்தில் பிறந்தவர்கள் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் காலம் கடந்து மணம் செய்து கொள்வதுதான் சிறப்பு. ஏனென்றால், இளம் வயதில் இவர்கள் செய்துகொள்ளும் திருமணம் பெரும்பாலும் மனக்கசப்பில்தான் முடியும்!

ஏதாவது ஒரு முடிவுக்கு வர விரும்பினால், தனிமையில் உட்கார்ந்து முடிவுசெய்யவேண்டும். மற்றவர்களுடன் கூடியிருக்கும் போது, மற்றவர்களின் யோசனைகளையும், எண்ணங்களையும் இவர்கள் தமது எண்ணங்கள என்று எண்ணிக்கொள்வதில் குழப்பம் ஏற்படும். அப்போது இவர்களால் தெளிவாக ஒரு முடிவுக்கு வர முடியாது. அன்பினாலும், உணர்ச்சிகளாலும் இவர்கள் கட்டுப்படுவதால் தவறான முடிவைச் செய்துவிடுவார்கள்.

இவர்கள் ஏற்றுக்கொண்டு செய்யும் எந்தச் செயலிலும், இவர்கள் பொறாமையை வெளிப்படுத்துவார்கள். இதன் விளைவாக இவர்கள் சினம்கொண்டு, சில வேலைகளில் கெடுதல் வேலைகளில் இறங்கி விடுவார்கள். பிறகு தாம் செய்த தவற்றை எண்ணித் துன்பம் கொள்ளுவார்கள்.

மற்றவர்கள் நடந்துவிட்டதை எண்ணித் துன்பம் கொண்டாலோ, அன்பு செலுத்தினாலோ இவர்களும் நடந்தது அனைத்தையும் மறந்து மன்னித்து விடுவார்கள். பிறகு சின்னப்பிள்ளைகளைப் போல் பொருளற்ற செயல்களையெல்லாம் செய்வார்கள்.

அன்பிலும், மதிப்பிலுமே இவர்களுக்குக் கருத்து அதிகம். ஆகையால், இவர்கள் தலைவர்களாகி விட்டால், இந்த இரண்டையுமே வலியுறுத்துவார்கள்.

அழகையும், கலையையும் ரசித்துப் பாராட்டும் தன்மை இவர்களிடம் எப்போதும் உண்டு. இசை, ஓவியம் ஆகிய கலைகளில் இவர்கள் ஈடுபட்டால், மிகுந்த வெற்றியைப் பெறுவார்கள். ஆனால், அவற்றைக் கொண்டு பெரும் பணம் திரட்ட வேண்டும் என்று ஒருபோதும் இவர்கள் எண்ணுவதில்லை.

நம்பிக்கையின்றி, நன்றியின் கடமையும் மறவாத நண்பர்களாக இவர்கள் விளங்குவார்கள். பொது ஊழியர்களாகவோ, அரசாங்க அதிகாரியாகவோ, இராணுவத் தலைவர்களாகவோ இவர்கள் வர வாய்ப்பு உண்டு. டாக்டர்களாக வந்தால் மிகுந்த வெற்றியை அடைவார்கள். ஆண்களாயிருந்தாலும், தோட்டங்களிலும், பூக்களிலும் இவர்களுக்குக் கொள்ளை ஆசை. பெண்கள் என்றால், கேட்கவா வேண்டும்.

**உடல்நிலை**

கட்டான உடலை இவர்கள் பெற்றிருந்தாலும், தொண்டை, மூக்கு ஆகியவற்றைப் பாதிக்கும் நோய்களால் இவர்கள் துன்பம்கொள்ள வாய்ப்புண்டு. தொண்டையில் அடிக்கடி வீக்கம் ஏற்படும். டிப்தீரியா போன்ற நோய்கள்வர வாய்ப்பு அதிகம்.

இருதயம் பாதிக்கப்படலாம். அடிக்கடி காரணம் எதுவுமின்றி மயக்கம் வரவோ, வலி வரவோ செய்யலாம். உடலில் புண் ஏற்பட்டால், அந்தப் புண்களால் தொடர்ந்து பல துன்பங்கள் ஏற்படும். குளிர்ந்த நிலங்களில் இவர்கள் வாழ்வது தவறு.

இவர்களுக்குப் பிடித்த நிறங்களாவன:- நீல வண்ணத்தின் எல்லாச் சாயங்களும் இவர்களுக்குப் பிடிக்கும். சிவப்பு நிறத்தைக் கண்டால், இவர்கள் மனம் துள்ளும். ஆனால், சிவப்பை நூலில் தான் பயன்படுத்தவேண்டும்.

(தொடரும்)


# பகிரங்க விரிவுரையும் குழுக் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

சமஷ்டியும் சுய நிர்ணயத்திற்கான உரிமையும் எனும் விடயத்திலான பகிரங்க விரிவுரையும் குழுக்கலந்துரையாடலும் நாளை திங்கட் கிழமை பி.ப.3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

அரசியல் யாப்பு மற்றும் நிர்வாகச் சட்டத்திணைக்கள பேராசிரியரும் சமஷ்டிக்கான நிறுவனப் பணிப்பாளரும் சுவிஸ் பல்கலைக்கழகப் பேராசிரியருமான காலாநிதி தோமஸ் பிளெயனர் மேற்படி விடயம் தொடர்பில் கருத்துரை வழங்கவுள்ளார்.

குழுக் கலந்துரையாடலில், யாழ்.பல்கலைக்கழக பொருளியற்றுரை சிரேஷ்ர விரிவுரையாளர் கலாநிதி வி.நித்தியானந்தன், அரசியல் சமூகவியல்துறை விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம், சட்டத்தரணி கோடீஸ்வரன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். (உ)



நீர்வேலி அரசசேகரப் பிள்ளையார் கோவில் மகோற்சவ காலங்களில் தெய்வீகப் பேருரையாற்றிய பேராசிரியர் அ.சண்முகதாஸ் தம்பதியினரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபேது, சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் (நீர்வை மணி) ஆசியுரை வழங்குவதையும், விழா நாயகர்களுடன் கவிஞர் இ.முருகையன் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# வலிமேற்கு பி.செ.பிரிவில் 26நுண்கருத் திட்டங்கள்

## அமுலாக்க சுமார் 20 இலட்சம் ஒதுக்கு

(தொல்புரம்)

வலி-மேற்கு பிரதேச செயலர் பிரிவில் 26 நுண்கருத்திட்டங்களை மேற்கொள்ள அரசின் வரவு-செலவுத்திட்ட நிதியிலிருந்து 19 இலட்சத்து 32 ஆயிரத்து 500 ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு:-

* வழுக்கையாறு சுடலை மடம் திருத்தம்-1,94,000
* கலைமகள் சனசமூக நிலையம் -40,000
* காந்திஜி சனசமூக நிலையம் -1,94,000
* தொட்டிலடி சனசமூக நிலையத்தில் மதில் அமைத்தல்-50,000
* தொல்புரம் மத்திய சனசமூக நிலைய முன்பள்ளி-25,000
* மூளாய் இந்து இளைஞர் சங்க பாலர் பாடசாலை-50,000
வலி-மேற்கு முன்பள்ளி-30,000
அராலி-மேற்கு சனசமூக நிலைய முன்பள்ளி-25,000
* வட்டு வடக்கு பிளவத்தை விளையாட்டுக்கழக முன்பள்ளி-25,000
* பண்ணாகம் ஸ்ரீமுருகன் இளைஞர் சங்கம் -20,000
* சங்கானை ஐக்கிய சங்கம்-25,000
* கராச்சி சுடலை வீதி புனரமைப்பு-1,94,000
* சுழிபுரம் கிழக்கு அ.மி.பாடசாலையில் அலுவலகம் அமைத்தல்-1,00,000
* வட்டு மத்திய கல்லூரி-48,500
* ஸ்ரீ கணேசாவித்தியாசாலை-1,00,000
* அராலி மேற்கு ஆரம்பப் பாடசாலை-1,00,000
* மூளாய் கார்த்திகேசு வித்தியாசாலை -40,000
* பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம் -2,00,000
* மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை(கட்டடம்)-35,000
* மூளாய் அ.மி.பாடசாலை -40,000
* மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை(கேற் அமைத்தல்) -25,000
* அராலி இந்துக் கல்லூரி-1,00,000
* அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை விளையாட்டு மைதானம் அமைத்தல்-50,000
* காட்டுப்புலம் அ.மி.த.க. பாடசாலை -50,000
* வட்டுக்கோட்டை கனான் சிறுவர் இல்லம்-97,000
* பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் -75,000

(உ-70)

## சிறுவர் அரங்கு

(யாழ்ப்பாணம்)

செயல்திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் ''விளையும் பயிருக்கு முளையில் உதவும்'' எனும் தொனிப்பொருளிலான 'சிறுவர் அரங்கு'- கருத்தரங்கு எதிர்வரும் 27,28 ஆம் திகதிகளில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

## அடிப்படை வசதிகள் இல்லை

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கில் உள்ள தாளையடி றோ.க.த.க.பாடசாலை எந்தவொரு அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் இயங்கிவருகிறது.

இவ்வாண்டு இரண்டாம் தவணையிருந்து தனது சொந்த இடத்தில் இயங்கிவரும் மேற்படி பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை, ஆசிரியர் விடுதியின்மை மற்றும் விளையாட்டு மைதானம் இல்லாமை உட்பட மற்றும் பல குறைபாடுகள் நிலவுகின்றன.

தற்போது இங்கு தரம்-9 வரையான வகுப்புகளே நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-35)

## உலர் உணவு விநியோகம்

(கந்தரோடை)

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில், நியாப் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுவந்த விவசாயக் குளங்கள் மற்றும் வாய்க்கால்களை ஆழமாக்கும் பணிகளில் ஈடுபட்டு வந்த தொழிலாளர்களுக்கான உலர் உணவுக் கொடுப்பனவுகள் நேற்றைய தினத்தில் இருந்து வழங்கப்பட்டு வருகின்றன. (உ-103)

## கூட்டம்

(தொல்புரம்)

சண்டிலிப்பாய், சங்கானை மற்றும் காரைநகர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள சமுர்த்தி வங்கிச்சங்களின் தலைவர்களை ஒருங்கிணைத்து 21 பேர் கொண்ட நிறைவேற்றுக் குழுவொன்றை அமைப்பது தொடர்பான முக்கிய கூட்டமொன்று நாளை திங்கட்கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (உ-70)

★ ★ ★

(கந்தரோடை)

யாழ்/சுன்னாகம் றே.க.த.க.பாடசாலையின் அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-103)

## சிறார்களுக்கு நிறையுணவு

(பளை)

பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனாவாழ்வுக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் 19 முன்பள்ளிகளில் கல்வி கற்கும் சிறார்களுக்கு போசாக்கு நிறையுணவு வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி சிறார்களுக்கான நிறையுணவை கியூடெக் மற்றும் உலக தரிசனம் ஆகிய நிறுவனங்கள் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(உ-97)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(தொல்புரம்)

கோப்பாய் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமும் விவசாயக் குழுக் கூட்டமும் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு மேற்படி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-70)

## பட்டதாரிகளைப் பதிவு செய்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் இன்று காலை 9.30 மணிமுதல் பி.ப. 2.30 மணிவரை யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் தம்மைப் பதிவுசெய்து கொள்ளலாம் என சங்கத்தலைவர் அறிவித்துள்ளார்.

வணிக முகாமைத்துவ மற்றும் உயர் கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புச் சம்பந்தமான கலந்துரையாடலும் இன்று இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ)

## இன்று ஒரு தகவல்

# சந்தர்ப்பமும் சூழ்நிலையும்

இரண்டுபேர் ஓரிடத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தனர். இவர்கள் இருவருமே ஏதாவதொரு விசயத்தைப் பற்றி அடிக்கடி விவாதிப்பவர்கள். ஒருவர் மற்றவரிடம் கூறினார்.''இப்போது நான் கூறுவனவெல்லாம் சரியா? என்று பாருங்கள்!'' என்றார். ''என்னவென்று கூறுங்கள்'' என்றார் இவரும். ''யானை கர்ச்சிக்கும் சிங்கம் பிளிரும் இது சரியா?''என்று கேட்டார். ''சரியில்லை! இது மரபு இலக்கணப்படி தவறு''என்றார் அடுத்தவர். ''நான் கூறியதைத் தவறு என்று கூறிவிட்டீர்கள்.ஆனால் மகாகவி பாரதியார் ஒரு கருத்தைக் கூறியுள்ளார் அது எப்படிச் சரியாக இருக்கும் என்று பாருங்கள்?'' என்றார் இவர். என்னவென்று கேட்டார் அடுத்தவர்.''குயில் கூவத்தானே செய்யும்? குயில் கத்தும் என்று பாரதியார் கூறியிருக்கின்றார்''என்றார் அவர்.இவர் கேட்டார் ''எந்தச் சந்தர்ப்பத்தில் அப்படிக் கூறினார்? என்று. அடுத்தவர் சொன்னார்.''பாரதியார் பாடிய காணி நிலம் வேண்டும். அந்தப்பாடலில்கத்தும் குயிலோசை சற்றே வந்து காதில் விழவேண்டும் என்று சொல்லியிருக்கிறாரே! கழுதையல்லவா கத்தும்?குயில் கத்தும் என்று பாரதியார் சொல்லியிருப்பது சரியா?'' என்று கேட்டாராம்.

உடனே இவர் பதில் கூறுகின்றார் இப்படி. ஏனென்றால் இவர் கொஞ்சம் விவரமான ஆள்.உடனே கூறினார் ''நீங்கள் கவிதையைப்படிக்கும் போது வெறும் இலக்கணத்தை அளவுகளாக வைத்துக் கொண்டு படிக்காதீர்கள்.அதில் உணர்ச்சிப் பிரவாகங்கள் இருக்கும். கவிஞனது உணர்ச்சிப்பிரவாகத்தை விளங்கிக்கொண்டு அந்தக் கவிதையைப் படித்தால் தான் அந்த வார்த்தைகளின் உண்மையான பொருளைப் புரிந்துகொள்ள முடியும். ஒரு பெரிய இலக்கிய விற்பன்னர் இதற்குப் பொருள் சொல்லியிருக்கின்றார் கேளுங்கள்'' என்று இவரும் விளக்கம் கூற ஆரம்பித்தார்.

''அதாவது அந்தப் பாட்டில் கூறப்பட்ட சூழ்நிலையை உணர்ந்துகொள்ள வேண்டும். அதாவது என்ன கூறுகின்றார் என்றால் பராசக்தியிடம் பாரதி வரம் கேட்கிறார். காணி நிலம் வேண்டும் பராசக்தி. காணி நிலம் வேண்டும்... '' என்று தொடர்ந்து பாடுகின்றார்.

அதில்தான் ஒரு இடத்தில் கத்தும் குயிலோசை சற்றே வந்து காதில் விழவேண்டும் என்று பாடினார். இலக்கிய நயமாகப் பார்க்கும்போது என்ன தோன்றுகின்றது என்றால் சூழ்நிலையைப் பாருங்கள். ஒரு நல்ல பளிங்கு மாளிகை, சலசலவென்று தென்னங்கீற்றுகளிலிருந்து வரும் தென்றல் காற்று, அப்படியே அமுதமா கப் பொழியும் முழுநிலா. இந்தச் சூழ்நிலையில் ஒரு பெண் இனிமையான குரலில் பாடிக்கொண்டிருக்கின்றார். பாரதியார் அந்தப்பாடலில் அப்படியே இலயித்துப் போயிருக்கின்றார். இந்த நேரத்தில் வேறெந்த ஒலி கேட்டாலும் அது இதற்கு ஈடாகாது. கத்துவது போல் தான் இருக்கும். அதனால் தான் குயில் கூவுவதுகூட பாரதிக்கு கத்துவது போல் தோன்றியிருக்கின்றது. அதனால் தான் கத்தும் குயில் ஓசை என்று கூறியிருக்கின்றார். அது மட்டுமல்லாது இன்னுமோர் சந்தர்ப்பத்திலும் இப்படிக் கூறினார்.

அதாவது காதலி தனது காதலனை எதிர்பார்த்து காத்திருக்கின்றாள். காதலன் வரவில்லை. அதனால் இவருக்கு ஏற்பட்ட சோகம் ''பாலும் கசந்ததடி, படுக்கை நொந்ததடி. கோலக்கிளி மொழியும் காதில் குத்தல் எடுத்ததடி'' கிளி பேசுவதால் யாருக்காவது குத்தல் எடுக்குமா? இந்தப் பெண்ணுக்கு ஏன் குத்தியது என்றால் அவளது சோகம் அப்படி! அதனால் அது குத்தலாக அப்போது தெரிந்தது .

இங்கு பாரதி அந்தப் பாட்டில் கலந்து மெய் மறந்து மகிழ்ச்சியில் ஒன்றிணைந்து போய் நிற்கின்றதனால் வேறு எந்த ஒலியைக் கேட்டாலும் அந்த நேரத்தில் கத்தலாகவே இருந்திருக்கின்றது. உணர்ச்சி தான் இங்கு முக்கியம் என்று இவர் விளக்கம் கூறினார்.

இலக்கியச் சிந்தனையாளர்கள் இவ்வாறெல்லாம் யோசிக்கின்றனர். இலக்கணமாகப் பார்க்கக்கூடாது உணர்ச்சி பூர்வமாகப் பார்க்க வேண்டும் என்று கூறுகின்றோமே அதே நேரத்தில் இப்படியும் ஆகிவிடுவது உண்டு.

ஒரு ஆசிரியர் என்ன செய்தார் என்றால் இலக்கண வகுப்பு நடத்திக் கொண்டிருந்தார். சில ஆசிரியர்கள் படிப்பிப்பதில் முன்னோடிகளாக இருப்பார்கள். அதனால் மாணவர்களும் மிகுந்த மரியாதை கொடுப்பார்கள். திறமை குறைவான ஆசிரியர் என்றால் மாணவர் மதிப்பும் சிறிது குறைவாகவே இருக்கும்.அதனால் ஆசிரியர்கள் தமது ஆற்றலை நன்கு வளர்த்துக்கொண்டால் மதிப்பும் நன்றாகவே கிடைக்கும்.

'இந்த ஆசிரியர் கூறினார்.''நான் இப்போது ஒரு வாக்கியம் கூறுவேன். அது என்ன காலம் என்று கூறவேண்டும்'' என்றார்.மாணவர்களும் ''கூறுங்கள் '' என்றனர்.'' நான் இப்போது பாடம் நடத்திக்கொண்டிருக்கின்றேன் ! இது என்ன காலம்?'' என்று கேட்டார் ஆசிரியர். ஒரு சிறுவன் எழுந்து கூறினான். ''இது எமது போதாத காலம்''சார்.

*இளசை எஸ்.சுந்தரம்.*

# நிரந்தர சமாதானம் ஏற்படுமென்ற எதிர்பார்ப்பு மங்கத் தொடங்கி யுள்ளது

## ஏ.எச்.எம். பௌஸி தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மீது புலிகள் தொடர்ந்தும் தாக்குதல்களை நடாத்தி வருவதால் நாட்டில் அமைதி ஏற்படும் என்ற எதிர்பார்ப்பும், இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளும் மங்கத் தொடங்கியுள்ளதாக முன்னாள் அமைச்சரும் தற்போதைய கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. எச்.எம். பௌஸி தெரிவித்துள்ளார்.

தனது வீட்டில் நடைபெற்ற கலந்துரையாடலில் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பளிப்பது தொடர்பாக ஏனைய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இவர் கலந்தாலோசனை நடத்தியுள்ளார்.

இக்கூட்டத்தில் அமைச்சர்களான எம். எச்.மொகமட், ரவூப் ஹக்கீம், ஏ.எல்.எம். அதாவுல்லா, நூர்தீன் மசூர் ஆகியோரும் கிழக்கு மாகாண முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

பௌஸி மேலும் பேசுகையில், தற்போதைய சமாதான முயற்சி களுக்கு நான் ஆதரவு தெரிவித்த போது எனது சொந்தக்கட்சி உறுப்பினர்களே அதனைத் தவறாக விளங்கிக் கொண்டனர். இச்சமாதான முயற்சிகளில் ஆரம்பத்திலிருந்தே குரல் கொடுக்க முஸ்லிம்கள் தவறியமை துரதிர்ஷ்டவசமானது.

இதுவரை காலமும் நாம் அனைவரும மௌனமாக இருந்தோம். அதற்கு காரணம் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி அக்கறைப்படாதது அல்ல சமாதானத்தை முன்னெடுப்பதில் நாம் பற்றுறுதி கொண்டிருந்தோம் என்பதே. எம்மால் சமாதானம் தடைப்படுவதை நாம் விரும்பவில்லை என்றார்.(த-6)

# தியாகி திலீபன் நினைவு நாட்களில் தீவகத்தில் அடையாள உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

தாயக விடுதலைக்காக தன்னுயிரை ஈய்ந்த தியாகி லெப் .கேணல் திலீபனின் 16ஆம் ஆண்டு நினைவின் 4ஆம் நாள் நிகழ்வு கடந்த வியாழனன்று நயினாதீவு மகாவித்தியாலத்தில் நயினாதீவு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் ஜீவன் மாஸ்ரர் தலைமையில் நடைபெற்றது.

நயினாதீவு மகாவித்தியாலய அதிபர் சோ. பகீரதன், ஆசிரியர் கலாவதி, கணேசா வித்தியாலய அதிபர் க.கணேசுவரன் ஆகியோர் பொதுச்சுடரினை ஏற்றி வைத்தனர்.

திலீபன் நினைவுச் சுடரினை புங்குடுதீவு-நயினாதீவுப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் யாழினியன் ஏற்றிவைக்க, போராளி ஈழமாறன் மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து சிறப்புரைகள்,கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

இதேவேளை,திலீபன் ஞாபகார்த்தமாக தீவகத்தில் இடம்பெறும் அடையாள உண்ணாநோன்பு நேற்று 7வது நாளாகவும் தொடர்கிறது.

இதில் பெருமளவு பொதுமக்கள் பங்கேற்று வருகின்றனர். (உ)

## இராசி பலன்

**21. 09. 2003**

**(பூரட்டாதி 4,ஞாயிறு)**

**தசமி பி.ப 1.02 வரை**

**புனர்பூசம் மு.ப 11.29 வரை**

**இராகுகாலம் - 4.32- 1.33**

**சுபநேரம் - 4.33-6.03**

**மேடம்**

அதிக வார்த்தை, தொழில்கஷ்டம், சிந்தனை மிகுதி, செல்வாக்கு குறைவு.

**இடபம்**

நல்ல முயற்சி, நண்பர்கள் உதவி, புதிய பொருள் சேர்க்கை, தெளிந்த சிந்தை.

**மிதுனம்**

பிதா சிந்தை, பணவிரயம், அமைதிக் குறைவு, காரிய தாமதம்.

**கடகம்**

தொழில் சிந்தை, போசன சுகம், எடுத்த கருமங்கள் கைகூடும், தனவரவு.

**சிங்கம்**

கடின உழைப்பு, சுப நிகழ்வு, தூர தேசச் செய்தி, மேன்மை.

**கன்னி**

புதிய திட்டமிடல், வீண்பயம், வயிற்றுக் கோளாறு, பிரயாணம்.

**துலாம்**

எதிர்பாராத அச்சம், போசன சுகம், சோம்பல், பிரயாண பயம்.

**விருச்சிகம்**

சென்ற இடத்தில் செல்வாக்கு, தொழில இலாபம், ஆரோக்கியம், பணவசதி.

**தனுசு**

சுகவாழ்வு, நல்ல பிரயாசை, புதிய விடயம், காரிய சித்தி.

**மகரம்**

வியாபார விருத்தி, பிரயாண இடையூறு, எண்ணங்கள் தாமதமாகும், கௌரவக் குறைவு.

**கும்பம்**

கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம், திடீர் பயணம், அற்பர் நேசம்.

**மீனம்**

இனிய அனுபவம், முயற்சி கைகூடும், பணவருவாய், பிறர் உதவி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

# அபிவிருத்தி வேலைகளுக்கு ஒத்துழைக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின் கீழான நிதியின் மூலம் காலத்தால் மிகவும் பழைமை வாய்ந்த செங்குந்தா சந்தை (கல்வியங்காட்டுச் சந்தை) புனரமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வேலையை கட்டம் கட்டமாக நிறைவேற்ற வேண்டியிருப்பதனால்,சந்தைக் கட்டடத்தின் சில பகுதிகளை இடித்து அகற்றி அவ்விடத்தில் புதிய சந்தையை அமைக்கும் பணி தொடரவுள்ளது.

அத்துடன்,சந்தைக் கட்டடத்தின் சிறு பகுதிகள் இடித்து அகற்றப்பட்டாலும் மேற்படி சந்தையில் வழமையான வியாபார நடவடிக்கைகள் இடம் பெறுவதற்கு ஏற்ற விதமாக தற்காலிக கொட்டில்கள் அமைககப்படவுள்ளன.

இதேவேளை, இச் செயற்பாடுகளால் ஏற்படும் அசௌகரியங்களைப் பொறுத்து அபிவிருத்தி வேலைக்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்கியுதவுமாறு சகல வர்த்தகர்களையும், அப்பகுதி வாழ் மக்களையும்,பாவனையாளர்களையும் யாழ்.மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் கேட்டுள்ளார். (உ)

# குரங்குபாஞ்சான் விடயத்தில் பிரதமர் ரணில் நழுவுகிறார்

## சரத் அமுனுகம குற்றச்சாட்டு

(கொழும்பு)

திருகோணமலை குரங்குபாஞ்சான் விடயத்தில் இருந்து தான் தப்பித்துக் கொள்ளும் பதிலையே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம பிரதமர் அனுப்பிவைத்துள்ள கடிதம் குறித்து நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட விடயம் இது என்பதால், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுடன் கலந்துரையாடிய பின்னரே பிரதமர் பதில் அனுப்பி வைத்திருக்க வேண்டும்.

ஆனால், அவ்வாறு இல்லாமல் பிரதமர் தான் தப்பித்துக் கொள்ளும் வகையிலும், ஜனாதிபதி மீது மேலும் குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் வகையிலுமே பதிலை அனுப்பிவைத்துள்ளார்.

பிரதமரின் இந்தப் பதிலை பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் நிராகரித்துள்ளன.

மேலும் இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு விரைவில் பதில்கடிதம் அனுப்பப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(தி-61)

## யாழ்.குடாநாட்டில்

# தமிழ்ப் பெண் பொலிஸார் ஒருவர்கூட கடமையில் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தமிழ்ப்பெண் பொலிஸார் ஒருவர் கூட கடமையில இல்லை எனத் தெரியவருகிறது.

தமிழ்பேசும் பெண் பொலிஸார் நால்வர் மாததிரமே யாழ்.குடாநாட்டில தற்போது கடமையாற்றி வருகின்றனர்.

இதனால், பெண் சந்தேக நபர்களைக் கைது செய்வதில் பல்வேறு சிக்கல்கள் எதிர்கொள்ளப்படுகின்றன.

இதேவேளை, தமிழ்ப்பெண் பொலிஸாருககு இங்கு நிலவும் பற்றாக் குறையைக் கருத்தில் கொண்டு யாழ்.குடாநாட்டில் விரைவில் 20 வரையிலான தமிழ்ப் பெண் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை,கசிப்பு உற்பத்தி விற்பனை தொடர்பில் இங்கு கைது செய்யப்படுபவர்களில் பெருமளவினர் பெண்கள என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

அறைபறை அன்னா கயவர்தாம் கேட்ட
மறை பிறர்க்கு உய்த்துரைக்க லான்.
—குறள்—

# வலம்புரி

## விசமப் பிரசாரம்

விடுதலைப் புலிகள் தயாரித்துள்ள திட்டவரைபை அரசு நிராகரிக்குமாயின் கொழும்பு மாநகரில் தாக்குதல் நடத்துவதற்கு விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையணியைச் சேர்ந்த 800 போராளிகள் தயாராக இருப்பதாக பொது ஜன ஐக்கிய முன்னணி பிரசாரம் செய்து வருகிறது.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்காத வரை இடைக்கால நிர்வாக சபையைப் புலிகளிடம் ஒப்படைக்கக் கூடாதெனக் கோரிக்கை வைத்த பொது ஜன ஐக்கிய முன்னணி இப்போது தனது பாதையைத் திசை திருப்பி புலிகளின் தற்கொலைப் படை கொழும்பு மாநகரத்திற்குள் புகுந்துவிட்டதாகப் பிரசாரம் செய்யத் தொடங்கியுள்ளது.

எப்பாடுபட்டும் சமாதான முயற்சியைக் குழப்ப வேண்டுமெனப் பகீரத முயற்சி செய்யும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணி விசமப்பிரசாரங்களை முன்வைப்பதன் மூலம் சமாதான முயற்சியைத் தோற்கடிப்பதில் அதீத அக்கறை கொண்டுள்ளது.

அரசும்-விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கடந்த 18 மாதங்களாக யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்துவரும் வேளையில் 800 தற்கொலைப் படைப் போராளிகள் கொழும்பு மாநகருக்குள் புகுந்துள்ளனர் எனக் கூறி தென்னிலங்கை மக்கள் மத்தியில் ஓர் அச்ச உணர்வை ஏற்படுத்தி அதன் மூலம் விடுதலைப் புலிகள் மீது தென்னிலங்கை மக்கள் கொண்டுள்ள நம்பகத்தன்மையை அறுத்தெறிவதே பொது ஜன ஐக்கிய முன்னணியின் நோக்கமாகும்.

இந் நோக்கத்தை எட்டுவதற்காக அரச தர்மத்தை மீறி பொது ஜன - ஐக்கிய முன்னணி தெரிவிக்கும் கருத்துக்களும், குற்றச்சாட்டுகளும் எல்லை கடந்து இப்போது தற்கொலைப் படைகள் கொழும்பிற்குள் புகுந்துவிட்டதாகப் பொய்ப்பிரசாரம் செய்து வருகின்றது.

அரசும், விடுதலைப் புலிகளும் முன்னெடுத்து வரும் சமாதான முயற்சிகள் வெற்றி பெறும் சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைக்கும் நோக்குடன் திட்டம் தீட்டும் பொது ஜன ஐக்கிய முன்னணி, தனது திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வசதியாக கொழும்பு மாநகருக்குள் புலிகளின் தற்கொலைப்படையணி புகுந்துள்ளதாக முன்கூட்டியே பிரசாரம் செய்து வருகிறது.

பொது ஜன ஐக்கிய முன்னணியின் கபடத்தனமான பிரசாரங்களை தக்கமுறையில் முறியடிக்கும் பொறுப்பு ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு உண்டு. இது விடயத்தில் அரசு அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்குமாயின் நிலைமை பாரதூரமாகிவிடும்.

# இயேசுபிரானின் உயிருள்ள வார்த்தைகளினால்

# மேலுலகப் பேற்றினை எமதாக்கி மகிழ்வோம்

மனிதன் உலகத்தின் மன்னன், சாதாரண வாழ்க்கையில் சிறந்த நற்குணமும், சுமுகமான செயற்பாடும் ஒருங்கே அமையப்பெற்று உலகத்தோடு ஒன்றியுள்ளான். ஆனால் மனிதனின்



சிந்தனை பல வேளைகளில் படைத்த மேம்பட்டுச் செல்ல நினைக்கின்றது. புது உலகைப் படைக்கப் போவதாகக் கட்டியம் கூறிக்கொண்டு அது நிறைவேறாமலே, மக்கள் இடையே ஒருவராக வாழ்ந்து மறைந்து விடுகிறார்கள். ''சிரித்துக் கழித்தல் மதிகெட்டசெயல்; ஏனெனில ஞானத்தோடும் அறிவாற்றலோடும் ஒருவர் உழைக்கிறார்; உழைத்துச் சேர்த்த சொத்தை அதற்காக உழைக்காதவருக்காக விட்டுச் செல்கிறார். அவரது உழைப்பு வீணே" (சபை உரை2:2)

### தள்ளிப்போடவேண்டாம்

உலகிலே நாம் வாழ்ந்தாலும் உலகுக்குரியவர்களாக மாறக் கூடாது என்பது புனித பவுலின் கருத்தாகும். ''நீங்கள் கிறிஸ்துவோடு

## பரமபிதா காட்டிய பாதை

உயிர் பெற்று எழுந்தவர்களானால் மேலுலகில் உள்ளவற்றை நாடுங்கள். கிறிஸ்துவே உங்களுக்கு வாழ்வளிப்பவர் (கொலோ 3:1-5) என்கிறார். சென்றதையும், வரப்போவதையும் நினைத்துப் பலர் இன்று நடக்கப்போவதை மறந்து விடுகிறார்கள். பழங்காலமெல்லாம் தீயது என்று நினைப்பவர் சமூகத்தில் எத்தனைபேர். நமக்கும் நாம் பேசவிரும்புபவர்களுக்குமிடையே நாம் எதிர்நோக்கும் பொருள்கள் உபயோகப்படாத கடலில் அலைகள் போல் ஓசையின்றி அடித்துப் புரளுகின்றன. நிலையற்ற வாழ்வின் நிலை இப்படித்தான் அமையும். எனவே நாம் எதையும் தள்ளிப் போட்டுக் கொண்டு காலங்கழிக்கக் கூடாது. நாம் பழகுபவர் சாதாரணமானவர்களானாலும், விரும்பத்தகாதவர்களானாலும் நீதியாக நடந்து கொள்ளவேணடும். நம்முடைய கூட்டுறவினால் தீயவரும் திருந்துவார்களானால் அது நீதியின் வெற்றியாகும்.

### இறை-மனித உறவு

இயற்கையின் ஒவ்வொரு அசைவும் ஒரு அறநெறிப்படிப்பினையின் விளக்கமாகும். இதனை நாம் விளங்கிக்கொள்ள வேண்டுமானால் இறை மனித உறவு எம் ஒவ்வொருவருக்கும் மிகவும் தேவையானதாகும். கண்ணுககுப் புலப்படும் பொருள்கள் அறிவு எதிர்பார்க்கின்றபடியே அமைவதுடன், மனிதனின் மனச் சாட்சியையும் பிரதிபலிக்கின்றது. அவைகள் மாற்றுதலை அடைவதன் மூலம் ஆத்மீக இயல்பை ஒட்டியே பரிணமிக்கின்றன. இப்படியான பார்வையை நாம் அடையும் போதுதான் உலகத்தில் இருந்தாலும் மேலுலகில் உள்ளவற்றை நாட எம்மை வழிப்படுத்தும்.

### தூயவழி

கிறிஸ்து பாவிகளான எம்மோடு வாழ்ந்தாலும், அவர் பாவம் தவிர மற்ற அனைத்துத் துன்பங்களையும் அனுபவித்தார். அவர் அனுபவத்தின் ஊடாக எமக்கு ஏற்படப்போகும் தீமைகளை நாம் வென்று; அவருடைய தூயவழியைப் பின்பற்ற வேண்டும் என்று எமக்கும் அழைப்பு விடுத்துக்கொண்டே இருக்கின்றார். நாளாந்தம் நாம் பரிசுத்தத்தில் வளர்ந்து விண்ணக மகிமைக்கான வழியைப் பிரிந்து விடாமல், நடக்க

**அன்ரனி பீற்றர்**

எம்மை நற்கருணை உணவின் ஊட்டத்தால் திடப்படுத்தி வருகின்றார். வாழ்வும், வழியும், ஒளியும், உண்மையும், உயிருமான இயேசுபிரானின் உயிருள்ள வார்த்தைகளை எமதாக்கி மேலுலகைச் சுதந்தரித்துக் கொள்ளும் பேற்றினை அடைவோம். □

# விடுதலைப் புலிகளின் திட்டவரைபு குறித்து

# அனைத்துக் கட்சிகளுடன் ஆலோசிக்கப்படும்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது இடைக்கால நிர்வாகசபைத்



திட்டவரைபினைச் சமர்ப்பித்ததன் பின்னர், அது தொடர்பாக ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் குக்குலுக்கங்கை நீர் மின்திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டும் பொருட்டு, அரசியல் தீர்வு காணும் விடயத்தில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தால் மட்டும் தனித்துநின்று செயற்பட முடியாது.

கடந்த ஏப்ரல்மாதம் முதல் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகிக்கொண்ட புலிகள், இடைக்கால நிர்வாகசபை யோசனைகளைச் சமர்ப்பிப்பதன் மூலம், அவர்கள் மீண்டும் பேச்சுவார்த்தைகளுக்குத் திரும்புவர் என்ற புதிய நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர், நாடு ஸ்திரமான நிலையை அடைந்துள்ளதுடன், அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கொண்டு அரசை நடத்துவதற்கான வாய்ப்புகளும் கிட்டியுள்ளன.

போர் நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம், சட்டத்தையும், சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்குப் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன.

மேலும், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவரும் மனிதப் படுகொலைகள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் மீது சில அரசியல்வாதிகளும், சர்வதேச அமைப்புகளும் குற்றம் சுமத்தி வருகின்றன. ஆனாலும், இவை பகிரங்கமான விடயமே.

இவ்விடயங்களுக்குத் தீர்வு காணும்பொருட்டு, ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

இதேவேளை, இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இரு பிரதான அரசியல் கட்சிகளும் முன்வர வேண்டும்.

இருப்பினும், இவ்விரு கட்சிகளும் அரசியல் தீர்வு அவசியம என்ற நிலைப்பாட்டில் இருக்கின்ற போதிலும், அக்கட்சிகளுக்கிடையே நிலவும் சம்பிரதாய பூர்வ அரசியல் பேதங்களே அதற்குத் தடையாக உள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-61)

## மல்லாகம் நலன்புரி நிலைய

# மக்களின் பிரச்சினைக்கு

# சமரசமான முறையில் தீர்வு

(கந்தரோடை)

மல்லாகம் நலன்புரி நிலையத்தில் வசித்துவரும் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், வலி - வடக்கு உதவி அரச அதிபர் ஊடாக பல உதவிகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, மேற்படி நலன்புரி நிலையத்தில் வசித்துவரும் மக்களை அவ்விடத்தைவிட்டு வெளியேறுமாறு அக் காணி உரிமையாளர் நிர்ப்பந்தித்ததை அடுத்து, நலன்புரி நிலைய சமாசத்தின் நிர்வாகிகள் காணி உரிமையாளருடன் பேசி சமரசமான முடிவு எட்டப்பட்டுள்ளது.

இனடிப்படையில், மேற்படி நலன்புரி நிலையத்தில் வசித்துவரும் மக்கள் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக்குடியமரும் வரை அங்கு வசிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. (உ-103)

## திநசரி தியானம்

### வைராக்கியச் செல்வம்

காமம், பேராசை, அகம்பாவம், விருப்பங்கள், பற்றுகள் முதலானவற்றை ஒழித்து மனத்தைத் தூய்மைப்படுத்தாவிட்டால் பிரம்மனை அடைவது மிகவும் கஷ்டம் எல்லாப்பற்றுகளிலிருந்தும் முடிந்த அளவு நீங்கள் விடுபட்டு தியானத்தில் அமர்ந்தால் மாசற்ற பேரின்பமான பிரம்மனை அடைய முடியும். புலன் இன்ப நாட்டத்திலிருந்து விடுபடுங்கள் வைராக்கியமாகிய செல்வத்தை அடையுங்கள். பற்றுக்களை ஒழித்து விட்டு தத்துவஞானம் பெறத் தொடங்கும் மனத்தின் அமைதியாகிய அமிர்தத்தைப் பெற்று மகிழ்ச்சியடையுங்கள்.

**சுவாமி சிவானந்தர்**

# கடமைக்குத் திரும்பாத

# ஊழியர் பணி நீக்கம்

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

நாளை திங்கட்கிழமை முதல் வேலைக்குத் திரும்பாத சுகாதார ஊழியர்கள் அனைவரும் பணிநீக்கம செய்யப்பட்டவர்களாக கருதப்படுவார்களென சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

சுகாதாரத் துறையில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களின் லீவுகளும் இரத்துச் செய்யப்பட்ட நிலையில், ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமது கோரிக்கைகளுக்கு அரசு நாளை திங்கட்கிழமை பதில் தராவிட்டால், தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் அவசரகாலத் தேவைகளையும் நிறுத்திவிடப்போவதாக சுகாதார சேவை தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (தி-60)

# தமிழ்-முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்!

## புலிகள்-முஸ்லிம் பேரவை இணக்கம்

(அக்கரைப்பற்று)

தமிழ்-முஸ்லிம் மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கும், தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கும் வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதி செய்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் வடக்குக் கிழக்கு மாகாண சமாதானத்திற்கான முஸ்லிம் பேரவையும் இணங்கியுள்ளன.

மட்டக்களப்பு கரடியனாறில் உள்ள விடுதலைப் புலிகளின் தேனகம் விடுதியில் நேற்றுக் காலை இடம் பெற்ற சந்திப்பின்போதே மேற்கண்ட இணக்கம் ஏற்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் தேனகம் விடுதியில் நேற்றுக் காலை இடம் பெற்ற இச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சார்பில் மூத்ததளபதி கேணல் கருணா அம்மான் தலைமையிலான குழுவினரும், வடக்குக் கிழக்கு மாகாண சமாதானத்திற்கான முஸ்லிம் பேரவைக் குழு சார்பில் எம்.எல்.அப்துல் ஜவா தலைமையிலான குழுவினரும் கலந்து கொண்டனர்.

சுமார் இரண்டு மணி நேரம் இடம் பெற்ற இச் சந்திப்பின் போது தமிழ், முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு, விவசாயம் உட்பட பல்வேறு பிரச்சினைகள் விரிவாக ஆராயப்பட்டுள்ளதுடன் பிரதேச ரீதியாக இடம் பெறும் பிரச்சினைகளை பிரதேச ரீதியாகக் கலந்துரையாடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம் பெற்ற இச் சந்திப்பில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் பங்குபற்றாவிடினும் சந்திப்பு சுமுகமான நிலையில் நடைபெற்றதாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட முஸ்லிம் தரப்பினர் தெரிவித்துள்ளதுடன் இது தொடர்பான முதலாவது கூட்டம் இன்று மட்டக்களப்பில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. -(ம)

# யாழ்-தனியார் பஸ் வண்டிகளுக்கு அனுமதிப் பத்திரங்கள் இல்லை

## போக்குவரத்து அதிகாரசபைத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தனியார் பஸ் வண்டிகளுக்கு போக்குவரத்து அனுமதிப் பத்திரமோ, வாகன அனுமதிப் பத்திரமோ இல்லை என தேசிய போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் ஓ.பி.தலகுனே தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று மாலை இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போதே ஓ.பி.தலகுனே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் பஸ் சேவையை சீர்படுத்தும் நோக்குடன் இடம் பெற்ற இக் கலந்துரையாடலில் தேசிய போக்குவரத்து அதிகார சபைத் தலைவர் ஓ.பி.தலகுனே, யாழ் அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ் உதவி மோட்டார் வாகனப் போக்குவரத்து உதவி ஆணையாளர் வி.பத்மநாதன், தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்தினா மற்றும் தனியார் பஸ் உரிமையாளர், அரச அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சுமார் இரண்டு மணி நேரம் இடம் பெற்ற இக் கலந்துரையாடலின் போது போக்குவரத்து அனுமதிப் பத்திரம், வாகன அனுமதிப்பத்திரம் இல்லாத பஸ் வண்டிகளுக்கு அவற்றை பெற்றுக் கொடுப்பது குறித்தும் அரசாங்க பஸ் போக்குவரத்து சேவையுடன் ஒருங்கிணைக்கப்பட்ட சேவைகளை நடத்துவது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது. (ம)

# நோர்வே தூதுக்குழு பிரதமரையும் சந்தித்தது

(கொழும்பு)

நோர்வே அனுசரணையாளர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை அவரது வாசஸ்தலமான அலரிமாளிகையில் நேற்று முன்தினம் சந்தித்துள்ளனர்.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பான விடுதலைப் புலிகளின் மாற்று யோசனைகள் பற்றி பிரதமருக்கு உத்தியோக பூர்வமாக அறிவிப்பதற்காகவே மேற்படி சந்திப்பு இடம் பெற்றுள்ளது. புலிகள் தமது தரப்பு யோசனைகளை அடுத்தமாதம் நடுப்பகுதியில் தெரிவிப்பர் என நோர்வேத் தூதரகம் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

நோர்வே தரப்பில் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன், விசேட தூதுவர் எரிக் சோல்ஹைம், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறக்ஸ்கர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். ஆனால் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் எப்போது தொடங்கும் என்பது பற்றி திட்டவட்டமாக அறியத்தரப்படவில்லை பெரும்பாலும் நவம்பர் முற்பகுதியில் ஆரம்பிக்கப்படலாமென அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இலங்கைக்கு வருகை தந்திருந்த நோர்வேத் தூதுக் குழுவினர் புலிகள் மற்றும் முஸ்லிம காங்கிரஸ் பிரதிநிதிகளையும் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (து)

**ப.நோ.கூ.சங்க...**

பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, அண்மைக்காலமாக மாலை நேரங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் பயணிகள் வாகனங்கள் போட்டி போட்டுச் செல்வதனால் பயணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதுடன் வாகனச் சாரதிகள் கண் மண் தெரியாத வேகத்தில் வாகனத்தைச் செலுத்துவதனால் பயணிகள் உயிரைக் கையில் பிடித்தபடி செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது. (த)

# நீர்கொழும்புக் கடற்பரப்பில் மர்மமான பதார்த்தம் மிதப்பு!

(கொழும்பு)

இலங்கையின் தெற்கு கரையோரப் புறமாக நீர்கொழும்பிலிருந்து கல்கிசை வரையான கரைப் பகுதியில் இருந்து 600 மீற்றர்களுக்கு அப்பால் உள்ள கடல் பிரதேசத்தில் மர்மமான பதார்த்தம் மிதப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது இரசாயன நச்சுப் பொருளையோ அல்லது உயிரியல் கழிவையோ கொண்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

தெஹிவளை, கல்கிசை கடற்கரையோரத்தை நோக்கி இன்னதென குறிப்பிட்டுச் சொல்லப்பட முடியாத இவ் இரசாயனப் பதார்த்தம் காணப்படுகிறது. இதனால் மீன்கள், கடல் உயிர்கள் இறந்ததாக தகவல்கள் எதுவும் இல்லை. ஆயினும் இப் பகுதியில் மீன்பிடிப்பதைத் தவிர்க்கும்படி அதிகாரிகள் மீனவர்களை கேட்டுள்ளனர்.

இது பற்றி அதிகாரிகள் தெரிவிக்கையில், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆய்வறிக்கையை தாம் எதிர்பார்த்திருப்பதாகவும், அதேவேளை தேவைப்படின் இதனைக் கட்டுப்படுத்த வெளிநாட்டு உதவியை கோரவிருப்பதாகவும் கூறினார். ஆனால் இது எண்ணெய்த் தன்மையுடைய பதார்த்தம் அல்ல என்றும் கரையும் இயல்புடையதாகவும், தொடர்ச்சியாகப் படர்ந்த நிலையில் இல்லை என்றும் கடல் மாசடைதல் தடுப்பு அதிகார சபையின் உப தலைவர் ரஞ்சித் ஜயசூரிய தெரிவித்தார்.

செம்மஞ்சள் நிறமாகப் படர்ந்துள்ள இப் பதார்த்தத்தின் மாதிரிகள் கடற்படையினரால் சேகரிக்கப்பட்டு அரசாங்கப் பகுப்பாய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஜயசூரிய மேலும் தெரிவிக்கையில், இப் பதார்த்தத்தின் இரசாயன இயல்புகள் சரியாக இனம் காணப்பட்ட பின்னர் இதனை அழிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார். (ந)

**யாழ் இந்துக்...**

பழைய மாணவர் சங்க நிர்வாகத்துக்கும் பாடசாலை நிர்வாகத்துக்கும் இடையில் முரண்பாடுகள் தொடர்ந்து வரும் நிலையில் பாடசாலையின் இளம் பழைய மாணவர்கள் அணி திரண்டு,யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் எனும் புதிய அமைப்பை உருவாக்க முயற்சித்தனர்.

இதனையடுத்து புதிய பழைய மாணவர் சங்கத்துக்கு எதிராக பழைய சங்கம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தது.

இத்தகைய சர்ச்சைகளுக்கு மத்தியில் நீண்ட காலமாக கூட்டப்படாத பழைய மாணவர் சங்கத்தின் கூட்டம் இன்று பெரும் எதிர்பார்ப்புடன் நடைபெறவுள்ளது. (இ)

**கிறிக்கெற்..**

யாழ்.அலுவலகத்தில் சந்திப்பு ஒன்றினை நடத்தியிருந்தனர்.

இதில் இளம் கிறிக்கெற் வீரர்களை உருவாக்குவது, சர்வதேச தரத்தில் யாழ்.மாவட்டத்தில் கிறிக்கெற் விளையாட்டு மைதானம் ஒன்றினை அமைப்பது தொடர்பாக ஆராய்ந்தனர்.

அத்துடன் மேற்படி கிறிக்கெற் மைதானம் அமைப்பதற்கு ஏற்ற இடங்களைத் தெரிவு செய்யும் வகையில் கைதடி,காக்கைதீவு ஆகிய பகுதிகளையும் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர். (உ)

**எதிர்க்கட்சித் தலைவர்களுடன்...**

அழைத்துள்ளார். திடீர்த் தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்கக் கூடியவகையில் பொது ஜன ஐக்கிய முன்னணியை வலுப்படுத்தவே ஜனாதிபதி இச் சந்திப்பிற்கான அழைப்பை விடுத்துள்ளார். இச் சந்திப்பில் பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்கொள்வது தொடர்பாகவும், இனப் பிரச்சினைக்கான சமாதானத் தீர்வுக்கு அதிகாரப் பகிர்வு குறித்தும் கட்சித் தலைவர்களிடம் ஜனாதிபதி விளக்கிக் கூறவுள்ளதாகவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(ம)

**எதிர்க் கட்சித் தலைவர்...**

செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோவும் கலந்துகொண்டனர்.

பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடனான இச்சந்திப்பின் போது பாதுகாப்புப் படையினர் தங்களது மனநிலையை உறுதியாக வைத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய எதிர்க்கட்சித்தலைவர் தனது திருகோணமலை விஜயத்தின் போது கன்னியா வில்கம் விகாரைக்கும் விஜயம் செய்து வழிபாடு நடத்தினார். (ம)

# தியாகி திலீபனுக்கு மக்கள் மலரஞ்சலி

## சிப்பாய் ஆகாயம் நோக்கி வேட்டு

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் ஊர்திப் பவனி, மல்லாகம் நீதிமன்ற வீதியில் வலி வடக்கு பிரதேச சபைக்கு முன்பாக மக்கள் அஞ்சலிக்காக தரித்து நின்ற வேளையில், அங்கு காவல் அரணில் கடமையில் இருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் மக்களை அச்சுறுத்தும் வகையில் திடீரென ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் இடம் பெற்றுள்ளது.

மக்களை அச்சுறுத்தி கலைந்து செல்ல வைக்கும் நடவடிக்கையாகவே வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

எனினும் மக்கள் கலைந்து செல்லாது, மலரஞ்சலி செலுத்தினர். படைச் சிப்பாயின் இந்த நடவடிக்கை மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (இ)

**இளம் பெண்...**

தெரிவிக்கப்பட்டது. சடலம் கொடிகாமத்தில் உள்ள உறவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரஸ்தாபப் பெண்ணின் இரண்டாவது கணவரான விஜயகுமாரை உடனடியாகக் கைது செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-52,43)

## கூட்டமைப்புடன் கலந்துரையாடல்

(ஏழாலை)

உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக வலி வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளது.

இக் கலந்துரையாடல் எதிர்வரும் 28ம், திகதி தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-12)

அமரர்
கணபதிகணேசன் ஞாபகார்த்தமாக
நடத்தப்பட்ட தரம் 11
மாணவர்களுக்கான
கட்டுரைப் போட்டி
பரிசளிப்பு நிகழ்வு
இடம்:- வலம்புரிக் கேட்போர் கூடம்
காலம் :- 21.09.2003 இன்று(ஞாயிறு) மு.ப. 10 மணி
பிரதம விருந்தினர்
பிரபல எழுத்தாளர் திரு.பொன்.கணேசமூர்த்தி
(முகாமையாளர், மக்கள் வங்கி காங்கேசன்துறைக் கிளை)
சிறப்பு விருந்தினர்
கலாநிதி கி.விசாகரூபன் B.A.(Hons) M.Phil P.G. Dip in J.M & T.A
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக் கழகம்)
மாணவர்கள்,ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கல்விப் பிரிவு
வலம்புரி

இயற்கை (மூலிகை) மருத்துவ முகாம்
இயற்கை மூலிகை சிகிச்சை மூலம் ஆஸ்துமா, உடல் பருமன், உடல் மெலிவு, சலரோகம், மூலவியாதி, முகப்பரு, இளநரை, தலைமுடி உதிர்தல், மாதவிடாய்ப் பிரச்சினை, தலையிடி, வாதம், நாரி உளைவு, கைகால் விறைப்பு, தோல் நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும் எந்தவித பக்கவிளைவுகளுமின்றி பரிபூரணமாக குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.
ஆண்மைக்குறைவு, குழந்தைப் பேறின்மை போன்ற பிரச்சினைகளுக்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
Dr.R.K.நவனீதன DYNS. SMP. NC.
(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)
பெருமாள் கோவிலடி வீதி,
யாழ்.பயணியர் விடுதி,
(வெலிங்ரன் சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.
யோகாசன CDகளை பெற்றுக் கொள்ளலாம்
C/6648
முகாம் நடைபெறும் நாள்கள்:
செப்ரெம்பர் 21ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 29ஆம் திகதிவரை

MEDICAL CHECK UP
வைத்திய பரிசோதனை
நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்
✦ 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
✦ X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.
இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!
போக்குவரத்து வசதி கருதி
சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பததிரி வீதி, யாழப்பாணம்.

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.09.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.